Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 26 (15.07.2004) வியாழக்கிழமை இதழ் :286

## விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி போரை ஆரம்பிக்கவே அரசு திட்டம்!

### சர்வதேச போர் திறனாய்வு முன்னறிவிப்பு அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி மீண்டும் போரை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் செயற்பட்டுவருவதாக சர்வதேச போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான ஸ்ரற்ஃபோர் நிறுவனம் தெரிவிதிருக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் கருணாவைப் பயன்படுத்தி இயக்க உறுப்பினர்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்துவது, அவர்கள் மத்தியில் மோதல்களை தோற்றுவிப்பதுடன் இந்த சூழ்நிலை தொடரும் வேளையில், தருணம் பார்த்து போரை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றும் ஸ்ரற்ஃபோர் நிறுவனம் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

போர் நிகழ இருப்பதை முற்கூட்டியே அறிவிப்பதில் நிபுணத்துவம் பெற்ற இந்த நிறுனம், இலங்கையில் மீண்டும் போர் இடம் பெறுவது தவிர்க்க முடியாத நிலையை எட்டியிருக்கிறது என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்களை ஆதாரம் காட்டி தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளை முறியடித்து வெற்றிகொள்ளும் போர்த் தந்திரோபாயங்களை அமெரிக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் புலிகளின் தாக்குதலில் உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்திவரும் விடுதலைப் புலிகளின் விசேட படையணியினர் கருணாகுழுவைச் சேர்ந்த சிறு அணி ஒன்றை பதுங்கியிருந்து தாக்கியதில் கருணாவிற்கு மிக நெருக்கமான முக்கிய சகா ஒருவர் இறந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளதாக விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தளபதி ஒருவரை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்குச் செல்லும் வீதியின் தெற்குப்புறமாக புளானைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கருணாகுழு சம்பந்தப்பட்டிருந்ததை விடுதலைப் புலிகள் உறுதி செய்தனர் .

இந்தத் தாக்குதலின் பின்னர் கொல்லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்தவரின் சடலம், ரி-56 ரக துப்பாக்கி, 9 மி.மீற்றர் பிஸ்டல், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து, இப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்ட புலிகள் கருணா குழுவைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை யுத்தத்தில் சந்திக்கத் தயார்; இதற்கே படையினருக்கு நவீன பயிற்சி!



## இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தமொன்றை ஆரம்பித்தால், அதற்கு முகங்கொடுக்க இராணுவம் தயாராகவே உள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.**

**இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர் லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட நேற்று கடற்படைத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தார்.**

**• அங்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவும் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத் தினர். இதன்போதே இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ள இராணுவத்திற்கும், கடற்படைக்கும் நவீன ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகிறது.

நவீன ஆயுதப்பயிற்சிகள் மூலம் தரையிலும், கடலிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலை தடுக்கமுடியும். கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலைமை பலப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தலைவர்கள், இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாமை இரண்டு தரப்பினருக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தடையாகவுள்ளது.

சிறு சம்பவங்கள் தவிர கிழக்கு மாகாணத்தில் பாரிய எந்தச் சம்பவங்களும் இடம்பெறவில்லை. கிழக்கு மாகாணத்தில் தற்போது அமைதி நிலை காணப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மீளவும் பேச்சுக்கள் ஆளும் கூட்டணிக்குள் இணக்கம்!

(கொழும்பு)

தடைப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக - ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு ஒன்று காணப்பட்டிருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடத்திய பேச்சுக்களின் முடிவிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மாகாண சபைத் தேர்தலில் கிடைத்த வெற்றி அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள், தடைப்பட்டுள்ள சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு பிரதம நீதியரசர் அடிக்கல் நாட்டினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நேற்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் சம்பிரதாயபூர்வமாக நாட்டிவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை விமானம் மூலம் பலாலி வந்தடைந்த பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கே.எம்.கம்லத், உலக வங்கியின் சட்ட நீதி புனரமைப்புத் திட்ட இயக்குநர் சுமித்ரா குணவர்த்தன, பொறியியலாளர் சமந்தா சமரசிங்க, நிபுணத்துவ ஆலோசகர் மேவன் குணசேகர, சீறா சர்வதேச கட்டட ஒப்பந்தகாரர்கள் சார்பில் நிமால் லொக்குகே முதலானோர் பொலிஸாரின் பாதுகாப்புடன் மேல் நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

யாழ்.மேல் நீதிமன்றத்தில் வைத்து பிரதம நீதியரசருக்கு செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் பான்ட் இசை மற்றும் அணிவகுப்பு மரியாதையை பிரதம நீதியரசர் ஏற்றுக்கொண்டார்.



பின்னர் பழைய நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கு வாகனத் தொடரணி மூலம் அழைத்துவரப்பட்ட பிரதம நீதியரசர் உள்ளிட்ட குழுவினரை பழைய நீதிமன்ற வளாகத்திற்கு முன்னே வைத்து, யாழ். மத்திய கல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிளில் சென்றவருடன் ஓட்டோ மோதி விபத்து!

### ஒருவர் பலி, ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாகவந்த ஓட்டோ சைக்கிளில் சென்றவருடன் விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானதுடன் பிரான்ஸ் நாட்டிலிருந்து விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்த ஐவர் படுகாயமடைந்தனர்.

கல்வியங்காடு, சட்டநாதர் சிவன் கோவில் பகுதியில் இடம்பெற்ற வபத்திலேயே, சைக்கிளைச் செலுத்தியவர் மரணமடைந்ததுடன் ஒட்டோவில் பயணித்த பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த ஐவர் காயமடைந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR
Your friend in the skies...

# ஆசிரியர்களின் இடமாற்றத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 2005ஆம் ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு மாகாணக் கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை மாகாணக் கல்விப் பணிப்பாளர் சகல வலயக் கல்வி பணிமனைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த ஒரு வலயத்துக்கு உட்பட்டதாகவும், இரு வெவ்வேறு வலயங்களுக்கிடையிலும், மாவட்டங்களுக்கிடையிலும், மாகாணங்களுக்கிடையிலுமான நான்கு வகையான இடமாற்றங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் மாகாணங்களுக்கான இடமாற்றம் கோரும் விண்ணப்பத்தை ஆசிரியர்கள் தமது அதிபர் ஊடாக செப்டம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

வலயத்துக்கு உட்பட்ட இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரும், வலயத்துக்கு இடையிலான இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னரும், வலயத்துக்கு இடையிலான விண்ணப்பங்களை ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி செயற்படும் வண்ணம் சகல இடமாற்றங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாட்டிறைச்சி விற்பதற்கு வடமராட்சியில் தடை

## பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் மாட்டிறைச்சிக் கடைகள் அனைத்தும் மூடப்படவேண்டும் என வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை செயலாளர் ஜோசப் அறிவித்துள்ளார்.

மாடுகளில் கால்வாய் நோய் பரவி வருகின்றன. அந்த மாட்டின் இறைச்சியை உண்பதால் மனிதர்களுக்கும் நோய் பரவுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சியை உண்பதை தடுப்பதன் மூலம் நோய் பரவுவதைத் தடுக்கமுடியும் என சுகாதார அதிகாரிகள் கருதுகின்றனர்.

இதனால் மாட்டிறைச்சி உண்பதைத் தடுப்பதற்கும், மாட்டிறைச்சியால் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகளும் மூடப்படவேண்டும் என்றும் இதனை மீறுவோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேசசபை செயலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (12)

# தொழிலாளர் சான்றிதழுக்கான அரையாண்டுப் பரீட்சை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி, தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி என்பவற்றின் 2001-2002 கல்வியாண்டிற்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் ,அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதோர் அலுவலக நேரங்களில் தொழிலாளர் கல்வி அலகில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என பரீட்சைப் பகுதியின் உதவிப் பதிவாளர் தெரிவித்தார்.


2004 - மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டி - விண்ணப்பம்

வலி. தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மட்டத்தில் மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

- ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் : 35 மைல் ஓட்டம் (வயதெல்லை கிடையாது)
- ஆண்களுக்கான மரதன் ஓட்டம் : 7 மைல் ஓட்டம் (வயதெல்லை கிடையாது)

போட்டிகளில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்கள் படிவங்களை

திரு. செ. ரமேஷ் (ச.நீ)
உள்ளூராட்சி உதவியாளர்,
பிரதேச சபை மானிப்பாய்

எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெறவும்.

விண்ணப்ப முடிவு திகதி : 21.07.2004

படிவம் இலவசம். போட்டி நேரம், திகதி படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பி. விக்டர்
செயலாளர்,
வலி, தென் மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்.

(சி-2762)


## புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா

(மானிப்பாய்)

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று காலை 6 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையம், மறுநாள் காலை 7 மணிக்கு திருநாள், திருப்பலியும் அதனைத் தொடர்ந்து ஒப்புக்கொடுக்கப்படும். (100)

## செபஸ்தியார் ஆலய திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் மாலை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

நாளை மறுதினம் மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், நற்கருணைப் பவனியும், ஞாயிறு காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம் பெறும் எனப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (100)

## திருநாள் திருப்பலி

(மானிப்பாய்)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளது. (100)


சிறு விளம்பரம்

சிவசாந்தி இலகு திருமண சேவை

இயற்கையினாலும், இடம் பெயர்வினாலும் பிற இடங்களில் உள்ளோர் சொந்த முகவரிகளையும் இணைத்து எழுத்து மூலம் தொடர்புகொள்க. (ஐந்து தபால் முத்திரைகளையும் இணைத்து விடுக) திரு. திருமதி. வே.கெ.தனபாலன் நுணாவில் சாவகச்சேரி அல்லது 81/1 சூசைப்பிள்ளையார் குளம் வவுனியா. (782)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)

நிறஞ்சனாஸ் சங்கானை
சில தினங்கள் மட்டும்
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
THE GURU
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்



அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


# மானிப்பாய் பிரதேச சபையில் நூலகவியல் தொடர்பு பயிற்சி!

(மானிப்பாய்)

வலிகாமம், தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் பொது நூலகங்களில் பணிபுரியும் ஊழியர்களின் நலன்கருதி, நூலகம் சம்பந்தமான பயிற்சியினை வழங்கும் நோக்குடன் விசேட நூலகவியல் தொடர்பான தொடர் பயிற்சிநெறியின் ஓர் அமர்வாக எதிர்வரும் புதன் கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 2 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை பொது நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளதென பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் நூலகர், நூலக சேவகர்கள், நூலகத் தொழிலாளர்கள் மற்றும் பதில் நூலக அலுவலர்கள் அனைவரையும் இந்தப் பயிற்சி நெறியில் தவறாது கலந்துகொள்ளுமாறும், அந்தந்த அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளையும் சமூகமளிக்க வேண்டுமெனவும் செயலாளர் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் நூலகத்தில் பத்திரிகைப் பகுதி தவிர ஏனைய பகுதிகள் இயங்கமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (100)



வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் அண்மையில் முதியோர் பகல் நிலையத்தை தொடக்கி வைத்து அந்தப் பகுதி கமக்கார அமைப்புத் தலைவர் வீ.இராசதுரை உரையாற்றுவதையும், அருகில் குடத்தனை தென் இந்திய திருச்சபை அருட் சகோதரர் றொகான் நிற்பதையும் படத்தில் காணலாம். (17)

# 750 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மின்சாரசபைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்

இலங்கை மின்சாரசபை 750 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ள இருக்கிறது.

தொழிற்பயிற்சி அதிகார சபையிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்கள் மத்தியில் இருந்து உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று மின்வலு, எரிபொருள் துறைப்பிரதி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தற்பொழுது 20 சதவீதமான வீடுகளுக்குக் குறைந்த அழுத்தமுள்ள மின்சாரமே விநியோகிக்கப்படுகின்றது.

இந்த நிலை விரைவில் மாற்றப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


வள்ளல் தளபாட மாளிகை

உதயமாகிவரும் கிளி. நகரில் தளபாட விற்பனையில் முன்னோடிகள்

மரத்தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள்
இல்லங்களுக்கு தேவையான பிளாஸ்ரிக் கதிரைகள்,
மெத்தை வகைகள்,
உயர்ரக குசன் செற்றி வகைகள்
மற்றும் அலுவலகங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள கிளிநொச்சியில் அமைந்துள்ள ஒரே நிறுவனம்

வள்ளல் தளபாட மாளிகை

T.P 21 - 2285790

148, 150 யாழ்சாலை கிளிநொச்சி.

(காடிப் போக்குசந்தி அருகாமை)

(சி-2761)

பொதுசன நூலகம்

# புலிகளின் செயற்பாடுகளை தோற்கடிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிக்குகள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

**கடந்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் விடுதலைப் புலிகளால் கொழும்பில் கொண்டுவரப்பட்ட மனிதக்குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் மூலம் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கு முன்பு உடனடியாகப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தாம் அரசாங்கத்தை வற்புறுத்துவதாக தேசிய பிக்குகள் முன்னணி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

இந்த முன்னணியின் தலைவரான விரிவுரையாளர், தம்புர அமரதேரர் செயலாளரான கலவெல்கல, சந்தாலோக தேரர் இருவரும் கையெழுத்திட்டு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஒரு தடவை ஆயுத பாணிகளாகவும், மறுதடவை ஏமாற்றுத்தனமாக சமாதானப் பேச்செனவும் போர்நிறுத்தத்தின் ஊடாக முன்னே வந்த விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழீழ அரசு என்ற எண்ணக்கருவினை மேலும் வளர்ப்பதற்கு இடமளிக்கப் போகின்றீர்களா, இல்லையா என அரசாங்கத்தைக் கேட்பதுபோல, மற்றைய அரசியல் கட்சியினரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தெற்கிலுள்ள சாதாரண மக்களை அச்சத்திற்குள்ளாக்கும் ஆயுத செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், வடக்கு - கிழக்கில் தமிழீழ இராச்சியத்தை நிறுவுவது இலகுவானதென நம்பும் விடுதலைப் புலிகள் அமைப்பு - கடந்த காலங்களில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில், அமுக்கவெடிகள் மற்றும் மனித வெடி குண்டுகளை வெடிக்க வைத்த முறையையும் நாம் கண்டுள்ளோம்.

கடந்த இருவருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தினுள் விடுதலைப் புலிகள் பெற்ற அதிக வெற்றிகள் காரணமாக, இதுவரை கொழும்பு நகர் மாத்திரமல்ல, அனைத்து மாவட்டங்களும் ஆபத்தான நிலைக்கு உட்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்குமுன் கொள்ளுப்பிட்டியில் வெடித்த மனித குண்டு கடந்த இரண்டு வருட காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு பலப்பட்டதன் பிரதிபலிப்பாகும்.

விடுதலைப் புலிகளின் மனித குண்டினைப் போன்று, அவர்களது ஏனைய ஆயுத செயற்பாடுகளையும் தோற்கடிப்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் நாம் வலியுறுத்துகிறோம்.

அத்துடன், கொழும்பு நகரில் மேலும் மனித குண்டுகள் வெடிக்க முன்னர், பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமெனவும் நாம் கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டுக் கடற்பரப்பில் இந்தியப் படகுகள் அத்துமீறல்

(கொழும்பு)

வட கடலில் நூற்றுக்கணக்கான இந்திய ட்றோலர்கள் நேற்று முன்தினம் முதல் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதில் பாதிப்பு ஏற்பட் டுள்ளதாக யாழ். மாவட்டக் கடற் றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

யாழ். மாவட்டத்தைச் சூழவுள்ள கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக, இந்திய மீன்பிடிப் படகுகள் தாராளமாக உலாவருகின்றன.

கடந்த மே மாதம் இந்திய மீனவர்களின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகைதந்து, இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்றபின், ஒருமாதகாலம் வரை இந்திய மீனவர்களின் றோலர்கள் பெருமளவிற்கு இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பது குறைவாகக் காணப்பட்டது.

எனினும், அண்மைக்காலமாக நெடுந்தீவு, பருத்தித்துறை, மண்டைதீவு கடற்பரப்புக்களின் கரைக்கு மிகவும் அண்மையாக வந்து, இந்திய ட்றோலர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப் படகுகளின் எண்ணிக்கை பல நூற்றுக்கணக்காக அதிகரித்திருப்பதுடன், பருத்தித்துறைக் கடற்பரப்பில் அதிக அளவில் மீன்பிடியில் ஈடுபடும் இவர்களால் - யாழ். குடாநாட்டு மீனவர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனங்களின் தலைவர் எஸ். தவரட்ணத்திடம் கேட்டதற்கு, இந்திய மீனவப் பிரதிநிதிகள் எமக்குத் தெரிவித்த உறுதிமொழியை மீறும் வகையில் தற்போது அவர்கள் செயற்பட்டுவருகின்றனர். இது குறித்து நாம் இந்திய மீனவப் பிரதிநிதிகளுடன் தொடர்புகொண்டு பேசவுள்ளோம் எனத் தெரிவித்தார். (ப)

# ஊவா முதலமைச்சர் பதவி சுதந்திரக் கட்சிக்குள் இழுபறி

ஊவா மாகாணசபைக்கான முதலமைச்சரைத் தெரிவு செய்வதில் சுதந்திரக் கட்சிக்குள் இழுபறி நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாணசபையின் முதலமைச்சர் பதவியை அதிக விருப்பு வாக்குகள் பெற்ற வேட்பாளருக்கு வழங்குவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்திற்கு எவ்விதத்திலேனும் முரணாக செயற்படவேண்டாமென, ஊவா மாகாண சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பான தொழிற்சங்கம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த சிலர், ஊவா மாகாண முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

மாகாணசபையில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளருக்கு முதலமைச்சர் பதவியை வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்திருந்ததாகக் கூறும் சிறிலங்கா எழுதுவினைஞர்களின் ஊவாக்கிளை உட்பட பல சங்கங்கள் கூடிய விருப்பு வாக்கான 42,679 ஐப் பெற்றுக்கொண்ட ஊவா மாகாணசபையின் முன்னாள் முதல்வர் எ.எம். புத்ததாசாவையே தற்போதும் நியமிக்க வேண்டுமென கோரியுள்ளன. (தே)

# விகாராதிபதி மீதான தாக்குதல் விடுதலைப் புலிகள் காரணமல்ல!

## அத்துரலிய ரத்தின தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹிங்குராங்கொடை விகாரையின் விகாராதிபதியை புலிகள் கொலை செய்யவில்லை என்றே நாம் கருதுகின்றோம். இந்தச் சம்பவம் அரசியல் சதித்திட்டமாக இருக்கலாம் என எதிர்பார்ப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் -

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடாகவே இந்தக் குண்டுத் தாக்குதல் அமைகின்றது. இந்த விடயம் தொடர்பாக - உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸாரிடமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கோரியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# கிழக்கு பிராந்திய ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர்!

## சர்வதேச பத்திரிகையாளர் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள ஊடகவியலாளர்கள் அண்மையில் கடுமையான மிரட்டல்களை எதிர்நோக்கியுள்ளதாக ஆர்.எஸ்.எவ் என்று அழைக்கப்படும் பத்திரிகையாளர்களுக்கான எல்லைகளற்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கிழக்கு நிலைமைகள் தொடர்பாகப் பார்க்கும்போது - இலங்கையில் ஊடக சுதந்திரம் உள்ளது என்பதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாதநிலை காணப்படுகிறது.

தற்போதுள்ள பதற்ற நிலைமை மீண்டும் யுத்தத்துக்கு இட்டுச் செல்லலாம். இதன்மூலம் புதிய ஊடக சுதந்திர மீறல்கள் இடம் பெறலாம்.

உடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோரை, கைது செய்வதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மாகாணசபை சட்டத்தை நீக்க நாடாளுமன்ற சட்டமூலம்

மாகாணசபைச் சட்டத்தை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய சிறி தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாகாணசபையைப் பராமரிப்பது பெரும் செலவாகின்றது. இது பொதுமக்கள் மீது பாரிய பழுவாக உள்ளது.

அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தலில் குறைவானவர்கள் வாக்களித்தமை இந்த நிலைமையைக் காண்பிப்பதாகக் கூறினார்.

# இந்திய அபிவிருத்தி உதவிகள் நுவரெலிய தமிழருக்கு இல்லை

## நகர ஆணையாளர் குற்றச்சாட்டு

நுவரேலியா மாவட்டத்தில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இந்தியா எந்தவித பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லையென அந்த மாநகர ஆணையாளர் இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில பல்வேறு பகுதிகளிலும் ஜப்பான், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

எனினும் இந்தியா எந்தவித அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார். இதேவேளை - இந்தப் பகுதிகளில் அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க ஜப்பான் அரசு 52 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்தப்பகுதிகளில் மின் இணைப்பு வேலைகளை முன்னெடுப்பதற்கு ரஷ்யா 150 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது.

# அரசாங்கத்துடன் இணைவது குறித்து இ.தொ.கா. முடிவெடுக்கவில்லையாம்

## புத்திரசிகாமணி கூறுகிறார்

அரசாங்கத்துடன் இணைவது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லையென, கட்சியின் நிர்வாகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வி.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற தொழிலாளர் காங்கிரசின் நிர்வாகக் கூட்டத்தின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் அரசியல் நிலை தொடர்பாக விவாதித்தோம். ஆனால், நாம் அரசாங்கத்துடன் சேர்வதா என்ற முடிவுக்கு வரவில்லை என மேலும் தெரிவித்தார்.

# அரசியல் அமைப்பை மாற்ற அரசு துரித நடவடிக்கை

## மங்கள சமரவீர தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு மாகாண சபைத் தேர்தலில் கிடைத்துள்ள வெற்றியையடுத்து, அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கை துரிதப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டுக்கான தமது பூரண ஆதரவை மாகாணசபைத் தேர்தலின் மூலம் இரண்டாவது தடவையாகவும் மக்கள் வழங்கியுள்ளனர்.

பெரும்பான்மையான மக்களின் ஆதரவு அரசாங்கத்திற்கே உண்டு என்ற யதார்த்த நிலையை உணர்ந்து, அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் சகல எதிர்க்கட்சிகளும் முன்வர வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அரசியலமைப்பை மாற்றுவது தொடாபாக திட்டமிட்டபடி அரசாங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், தற்போதைய தேர்தல் முறைமையை முன்னுரிமை அடிப்படையில் மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, நடைமுறையில் உள்ள அரசியலமைப்பை மாற்றுவதானால் சிறுபான்மை இனங்களின் நலன்களைப் பாதிக்கும் ஒன்றாகவே அமையுமென சிறுபான்மைக் கட்சிகள் பல சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதற்கான கடுமையான எதிர்ப்பையும் அவை வெளியிட்டு வருகின்றது.

# கொலை சந்தேக நபர் பிணையில் விடுதலை

கடந்த மே மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு அருகாமையில் விசேட புலனாய்வுத்துறைப் பொலிஸ் உத்தியோகத்தர் பி.எச்.தசநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் மட்டக்களப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக திகாமடுல்ல வாசியான சிவலிங்கம் சிவகுமாரன், வந்தாறுமூலை வாசியான பேரின்பம் ஜெயக்குமார் மற்றும் சங்கமான் கண்டி வாசியான சரவணமுத்து சாந்தகுமார் ஆகிய மூன்று நபர்களையே மட்டக்களப்பு நீதிமன்றம் விடுவித்தது.

சந்தேக நபர்கள் மீது ஆட்கொலை தொடர்பாக வழங்குத் தாக்கல் செய்யப் போதிய ஆதாரம் இல்லை என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்தே நீதிவான் இவர்களை விடுதலை செய்தார்.

## பதினெட்டு வருடங்களின் பின்

# பெற்றோரைத் தேடும் பெண் நெதர்லாந்திருந்து வருகை

நான்கு மாதக் குழந்தையாக இருக்கும்போது நெதர்லாந்து தம்பதிகளால் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட நிலானி என்ற 18 வயதுப் பெண் தனது பெற்றோரைத் தேடி இலங்கை வந்துள்ளார்.

மாரப்பி என்னுமிடத்தில் தனது தந்தையான கல்மில்லாம அப்புகாமிலாகே - வின்சன் மேசனாகப் பணிபுரிந்தவரெனவும், அவரது பிறப்புச் சான்றிதழில் தாயின் பெயர் சந்திரிகா மைக்காசி என்றும் காணப்படுகின்றது.

இந்தப் பெண் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் பிறந்துள்ளார். நெதர்லாந்தில் இருக்கும் அவரது சதோதரரான தினேஷ் கில்பத்த 1984 இல் பிறந்தவராவார்.

நெதர்லாந்து பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறும் கல்வித் தராதரத்தைப் பெற்றுள்ள நிலானி, தனது பெற்றோரைத் தேடிவருவதுடன், தனது பெற்றோரைத் தேடித்தருமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 2007 உலகக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றும்!

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி 2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் இந்திய அணி உலகக் கோப்பையைக் கைப்பற்றும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

ஆசிய கோப்பையை மட்டுமன்றி, 2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கோப்பையையும் இந்தியா கைப்பற்றும். தற்போது இந்திய அணி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக உள்ளது. இதேநிலை தொடர்ந்தால் இந்தியாவுக்குத்தான் நிச்சயம் உலகக்கோப்பை கிடைக்கும்.

டெண்டுல்கர், ராவிட், கும்ளே போன்ற முக்கியமான வீரர்கள் இந்திய அணியில் இருக்கிறார்கள். புதிய வீரர்களும் சிறப்பாக பந்து வீசுகிறார்கள் எனத் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி உலகக்கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - 2007 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை இந்தியா கைப்பற்றும் என தென்னாபிரிக்க முன்னாள் வீரர்கள் மைக் பிராக்டா, டெனிஸ் லிண்ட்சே ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் தற்போது சர்வதேச கிரிக்கெட் சபையில் நடுவர்களாக பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிதென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா ஆகிய நாடுகளில் நடை பெற்றது.

இந்தப் போட்டியில் அவுஸ்ரேலியா உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. இறுதிப் போட்டியில் இந்திய அணியைத் தோற்கடித்த தன் மூலமே அவுஸ்ரேலியா உலகக்கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது.

# ஆசியக் கிண்ணத்தை இந்திய அணி வெல்லும்!

## ராவிட் நம்பிக்கை தெரிவிப்பு



இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வெல்லும் என அந்த அணியின் துணைத் தலைவர் ராவிட் மற்றும் பயிற்சியாளர் ஜோன்ரைட் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் கிரிக்கெட் அணி, நேற்றுமுன்தினம் சென்னையிலிருந்து புறப்பட்டு கொழும்பைச் சென்றடைந்தது.

அணித் தலைவர் கங்கூலி, சென்னைக்கு தாமதமாக வந்தமையால் ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்த துணைத் தலைவர் ராவிட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது -

ஆசிய கோப்பை போட்டியில் பாகிஸ்தான், இலங்கை போன்ற முன்னணி அணிகள் இடம்பெறவுள்ளதால், இந்தத் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும். எனினும் இந்திய அணி சிறப்பாக ஆடி வெற்றிபெறும்.

இலங்கையில் நிலவும் தட்ப, வெப்ப நிலையை பொறுத்து இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு இருக்கும்.

வேகப்பந்து வீச்சாளர்களான சஹீர்கான், நெக்ரா ஆகியோர் அணிக்குத் திரும்பியிருப்பது பந்துவீச்சில் கூடுதலான பலத்தை அளிக்கும் எனத் தெரிவித்தார்.

இந்திய அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் கூறியதாவது -

இந்திய அணி வீரர்கள் தற்போது முழு உடல்தகுதியுடனும், திறமையுடனும் இருக்கின்றனர். எனவே இந்திய அணி வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் கடும் சவால் நிறைந்ததாக இருக்கும். இந்த ஆட்டம் இரு நாட்டு ரசிகர்களுக்கும் நல்ல விருந்தாக அமையும் எனத் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு மாகாண மட்ட பட்மின்ரன் போட்டி முடிவுகள்!

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட, 19 வயதிற்குட்பட்ட ஆண், பெண் அணிகளுக்கிடையிலான பட்மின்ரன் போட்டிகள் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் வவுனியா கல்வியியற் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

இதில் வெற்றிபெற்ற அணிகள் வருமாறு-

19 வயதின் கீழ் ஆண்கள் பிரிவு -

முதலாமிடம் - அம்பாறை இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சென். ஜோன்ஸ் கல்லூரி.

19 வயதின் கீழ் பெண்கள் பிரிவு -

முதலாமிடம் - உடுவில் மான்ஸ் பாடசாலை.

இரண்டாமிடம் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## உள்ளூராட்சி வார விளையாட்டுப் போட்டி

வலி. தெற்குப் பிரதேச சபையின் சனசமூக நிலையங்களுக்கு இடையிலான உள்ளூராட்சி வார விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் கரப்பந்தாட்டப் போட்டிகள் (செற்றப்) ஏழாலை மகாவித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கும் -

கரப்பந்தாட்டம் ஓவர் கேம் போட்டிகள் உடுவில் ஞானப்பிரகாசம் சனசமூகநிலைய மைதானத்தில் நாளை பிற்பகல் மூன்று மணிக்கும் -

கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியிலும் -

தாச்சிப் போட்டிகள் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் இணுவில் அண்ணா சனசமூக நிலைய மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (101)

## அஸ்ரா கிண்ணத்துக்கான பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி 401 ஓட்டங்கள் பெற்று சாதனை!



அஸ்ரா கிண்ணத்துக்கான 16 வயதுக் குட்பட்ட- பாடசாலைகளுக்கு இடையிலான அகில இலங்கை ரீதியில் நடைபெறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவன் எஸ்.அர்ச்சுனராஜ் - யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற சுற்றுப்போட்டியின் முதலாவது சுற்றில் 6 போட்டிகளில் 401 ஓட்டங்களைப்பெற்று தொடரில் சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இதில் ஒரு சதமும், 4 அரைச்சதமும் அடங்கும். (17)

# 'கோபா' அமெரிக்க உதைபந்து காலிறுதிக்குள் ஆர்ஜென்ரீனா!

கோபா அமெரிக்க கால்பந்துப் போட்டி பெரு நாட்டில் நடைபெற்று வருகிறது. 'பி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா உருகுவே அணிகள் மோதின.

இதில் ஆர்ஜென்ரீனா 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முதல் பகுதி ஆட்டத்தில் இரு அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன.

ஆர்ஜென்ரீனா அணியில் லுசினா 2 கோலும் (20 ஆவது நிமிடம், 44 ஆவது நிமிடம்) கிறிஸ்டியன் கோஜைல்ஸ் (19 ஆவது நிமிடம்), ராபெர்ட்டே அயலா (35 ஆவது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர். உருகுவே அணியில் பேபியன் (7ஆவது நிமிடம்), வின்சென்ட் சான்செஸ் (38 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர்.

இது ஆர்ஜென்ரீனா பெற்ற 2 ஆவது வெற்றியாகும். இதன்மூலம் அந்த அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் மெக்சிக்கோ 2-1 என்ற கோல் கணக்கில் ஈக்வடோரை தோற்கடித்தது.

'பி' பிரிவில் மெக்சிக்கோ 2 வெற்றி ஒரு சமநிலையுடன் 7 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், ஆர்ஜென்ரீனா 2 வெற்றி ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தையும் பிடித்தன. இந்த இரண்டு அணிகள் காலிறுதிக்கு நுழைந்தன. உருகுவே ஒரு வெற்றி, ஒரு சமநிலை, ஒரு தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்றுள்ளது.

நேற்று நடைபெறவிருந்த 'சி' பிரிவு ஆட்டத்தின் முடிவைப் பொறுத்து உருகுவே தகுதி பெறுமா? என்பது தெரியவரும். ஈக்வடோர் 3 ஆட்டத்திலும் தோற்று போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டது.

'பி' பிரிவில் 2 ஆவது இடத்தை பிடித்த ஆர்ஜென்ரீனா காலிறுதியில் 'ஏ' பிரிவில் 2 ஆவது இடத்தை பிடித்த பெருவுடன் மோதுகிறது.

# சிறந்த கிரிக்கெட் வீரர் யார்? ஜெப்ரிபோய்கொட் விளக்கம்!



போட்டிகள் இல்லாத சமயங்களில் வீரர்கள் அளவுக்கதிகமாக 'ஜிம்'மில் தங்களுடைய நேரத்தைச் செலவிடக்கூடாது என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் ஜெப்ரி போய்கொட் அறிவுறுத்தியுள்ளார்.

பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சி எடுத்துவரும் 19 வயதுக்குட்பட்ட வீரர்களிடமும், இந்திய 'ஏ' அணி வீரர்களிடமும் உரையாற்றிய ஜெப்ரி போய்கொட் - வீரர்கள் அளவுக்கதிகமாக 'ஜிம்' மில் உடற்பயிற்சிக்காக நேரத்தைச் செலவிடக்கூடாது என்று அறிவுரை வழங்கினார்.

அவர் மேலும் கூறுகையில் -

துடுப்பாட்ட வீரராக இருந்தால் நிறைய நேரம் பயிற்சி எடுங்கள், பந்து வீச்சாளராக இருந்தால் நிறைய நேரம் பந்துவீச பயிற்சி எடுங்கள்.

என்னுடைய கால ஆட்டத்தில் நான் ஓரளவுக்கு தான் உடற்பயிற்சிகளை மேற்கொள்வேன். ஆனால் நீண்ட தூரம் ஓடி பயிற்சிகளை நான் எடுக்கவில்லை. என்னுடைய உடலில் இருக்கும் அனைத்துத் தசைகளையும் கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்வேன். மனதை ஒரு முகப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துவேன். இவை இரண்டுமே இனிங்ஸில் விளையாட எனக்கு மிகவும் உதவி யாக இருந்தன.

இதைத்தான் பந்து வீச்சாளர்களுக்கும் கூற விரும்புகின்றேன். பந்துவீச்சாளர்கள் நிறைய ஓவர்களை வீசவேண்டும். இதை விட்டுவிட்டு 'ஜிம்' மில் அளவுக்கு அதிக நேரத்தை செலவிட வேண்டாம். தற்போது இருக்கும் வீரர்கள் பலரிடம் ஜிம் உடற்பயிற்சியே அதிகம் காணப்படுகின்றது. கிரிக்கெட் உடற்தகுதி காணப்படுவதில்லை.

கிரிக்கெட் உடற்தகுதி என்பது மிகவும் முக்கியம். தனது மூளையை பயன்படுத்தி யோசித்து விளையாடும் வீரரே சிறந்த கிரிக்கெட் வீரர் ஆவார் என்றார்.

## யங்லயன்ஸ் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி

(பருத்தித்துறை)

தமிழீழ விளையாட்டுத்துறை - யாழ். மாவட்டப்பிரிவின் அனுமதியுடன்- பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் - வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுடர்ஒளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொலிகை விநாயகர் விளையாட்டுக் கழகமும் -

ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து டயமன்ஸ் ஏ அணி மோதும் போட்டி பிற்பகல 4 மணிக்கும் நடைபெறவுள்ளது. (12) (13)

## ஆசிய கிண்ண கிரிக்கெட்; இ.எஸ்.பி.என். ஒளிபரப்பு!

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி கொழும்பு, தம்புள்ள மைதானங்களில் நாளை முதல் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியை தனியார் தொலைக்காட்சியான இ.எஸ்.பி.என். - ஸ்ராட் ஸ்போற்ஸ் நேரடியாக ஒளிபரப்புச் செய்யவுள்ளது. பகல் ஆட்டங்கள் காலை 9.05 மணிக்கும், பகல் - இரவு ஆட்டங்கள் பிற்பகல் 2.45 மணிக்கும் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இந்திய அணி விளையாடும் ஆட்டங்களை தூரதர்ஷன் நேரடியாக ஒளிபரப்புச் செய்யவுள்ளது.




## நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் உலக சாதனை!

ஏதென்ஸ் ஒலிம்பிக்குக்கான தகுதிச் சுற்றுப் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றது. இதன் 200 மீற்றர் நீச்சலில் அந்நாட்டு வீரர் ஆரோன் பெரிசோல் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

அவர் - பந்தய தூரத்தை ஒரு நிமிடம் 54.74 வினாடியில் கடந்தார். இதற்கு முன்பு ஒரு நிமிடம் 55.15 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

இதே போல 200 மீற்றர் பிரஸ் டிரோக் நீச்சலில் அமெரிக்க வீரர் அமந்தா பியர்ட் 2 நிமிடம் 22.44 வினாடியில் கடந்து உலக சாதனையை படைத்தார். 2 தினங்களுக்கு முன்பு லொய்சல் ஜோன்ஸ் 2 நிமிடம் 22.96 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

## ஆசிய கோப்பை கிரிக்கெட் இலங்கை அணி அறிவிப்பு!

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் முரளிதரன் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற அந்த அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் தொடரில் தனிப்பட்ட காரணங்களால் முரளிதரன் விளையாடவில்லை.

இந்த நிலையில் 6 நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான 14 பேர் கொண்ட அணியில் முரளிதரன் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணியில் கப்டனாக அத்தப்பத்து நீடிப்பாரென இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 'பி' பிரிவில் இலங்கை அணி இடம்பெற்றுள்ளது. வரும் சனிக்கிழமை தனது முதல் போட்டியை விளையாடும் இலங்கை அணி, ஐக்கிய அரபு எமிரேட்டை சந்திக்கிறது.

இலங்கை அணிவீரர்களின் விபரம் வருமாறு-

அத்தப்பத்து (கப்டன்), ஜெயவர்த்தன (துணைக்கப்டன்), சனத் ஜெயசூரியா, ஜெயந்த, சங்ககார, திலகரத்ன தில்ஷான், திலினா கன்டம்பி, உபுல் சந்தன, சமிந்தவாஸ், நுவான் சொய்சா, முரளிதரன், குணவர்த்தன, மலிங்க, ம.்.றூப்.

### யாழ்.கல்வி வலயத்தின் ஏற்பாட்டில்

# வாசிப்புத்திறன் குறைந்த மாணவர்களுக்கு வாதரவத்தையில் எழுத்தறிவூட்டல் பயிற்சி

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட வாதரவத்தைக் கிராமத்தில் வாசிப் புத்திறன் குறைந்த மாணவர்களுகக்கு எழுத்தறிவூட்டல் பயிற்சிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதல் இந்தப் பகுதியிலுள்ள விக்னேஸ்வரா சன சமூக நிலையத்தில் இந்தப் பயிற்சி ஆரம்பிக்கப் பட்டது.

இந்தப் பகுதியிலுள்ள மாணவர் களில் அனேகமானவர்கள் வாசிப் புத்திறன் குறைந்தவர்களாக இருப் பதை அடுத்து, யாழ்.கல்வித் திணைக களம் இந்த ஏற்பாட்டைச் செய்துள் ளது.

வாசிப்புத்திறன் குறைந்தவர்கள் இனம்காணப்பட்டு, அவர்கள் பாட சாலை நேரத்தில் இந்த வகுப்புக் களை யாழ்.கல்வி வலய முறைசாரா பிரிவு நடத்தி வருகின்றது.

திங்கள் முதல் வெள்ளி வரை பாடசாலை நாட்களில் இந்த வகுப் புக்கள் நடாத்தப்பட்டுவருகின்றது.

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்.மாவட்டத்திலுள்ள அஞ்சல், உபஅஞ்சல் அலுவலகங்களில் உள்ள சிற்றூழியர்களுக்கான பதிலாட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் 23.08.2004 அன்று 18 வயதுக்குட்படாதவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அத்தோடு விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கும் முகவரியில் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வசிப்பவராக இருத்தல் வேண்டும் எனவும், விண்ணப்பங்கள் யாவும் அடுத்தமாதம் 23ஆம் திகதிக்கு முன் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதுடன், மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் அவர்களது பிரதேச அஞ்சல் அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தின் இடது பக்கமூலையில் 'பதிலாட்களைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம்' என எழுதுதல் வேண்டும் என யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சம்மந்தர் சிவராஜசிங்கம் கேட்டுள்ளார். (ப)

### —வலிகாமப் பிரதேசம்—

# மாதிரி வீட்டுத்திட்டம் ஓகஸ்டில் ஆரம்பம்

வலிகாமப் பிரதேச செயலர் பிரிவுகளில் உலக வங்கி மூலமான மாதிரி வீடமைப்பு திட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதங்களில் இடம் பெறவுள்ளது.

நடைமுறைக்கு வரவுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், விதவைகள், வருமானம் குறைந்த வர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வீட்டுத்திட்டம் தெரிவு செய்யப்பட வுள்ளது. இந்த நடைமுறை பிரதேச குழுக்கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டதாக சம்மந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (91)

# இரட்டைக் குழந்தை எனக்கூறி வைத்தியர்கள் ஏமாற்றிவிட்டனர்

### – தாயார் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

தாயார் ஒருவர் தனக்குப் பிறந்த மற்றைய குழந் தையை தன்னிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்துத் தெரியவருவதாவது-

வடமராட்சி கரணவாயைச் சேர்ந்த தெய்வரதி திருஞானசேகரன் என்ற பெண் - கருவுற்றிருந்த சமயம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஸ்கானிங் செய்து பார்த்த வைத்தியர்கள் அவருக்கு இரட்டைக் குழந் தைகள் பிறக்க இருப்பதாகத் தெரிவித்திருந்தனர். மருத்துவ அறிக்கையிலும் இதனை உறுதி செய்திருந் தனர். இதற்கமைய பிள்ளை பிறப்பதற்குரிய காலம் வந்ததும், இரு குழந்தைகளும் பூரண வளர்ச்சி அடைந் திருப்பதால் சத்திரசிகிச்சை மூலமே அவற்றை வெளி யெடுக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

இதற்குத் தாயார் உடன்படவே சத்திரசிகிச்சை மூலம் ஒரு குழந்தை மட்டுமே தாயின் வயிற்றில் இருந்துள்ளது. இதனால், ஸ்கானிங் செய்கையில் ஏதோ தவறு நேர்ந்து விட்டதென வைத்தியர்கள் உணர்ந்து கொண்டு, தாயாரிடம் விடயத்தைத் தெரி வித்துள்ள போதிலும் வைத்தியர்கள் கூறியபடி தனக்கு இரு குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். ஆகவே, தனக்குப் பிறந்த மற்றைய குழந்தையை வைத்தியர் களிடம் இருந்து பெற்றுத்தருமாறு தெரிவித்தே தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், பொலிஸாரிடமும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது. இது தொடர்பான விசாரணையை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ப-17)

# கட்டாக்காலி மாடுகள் தென்மராட்சியில் திருட்டு

தென்மராட்சி தெற்குப் பகுதி களில் கட்டாக்காலிகளாக திரியும் மாடுகள் திருடர்களால் பிடித்துச் செல்லப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மறவன்புலோ, தனங்கிளப்பு, பகுதிகளிலே அதிகமாக மாடுகள் பிடிக்கப்பட்டு, இறைச்சிக்கு பயன் படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்த போது, கைவிட்டுச் சென்ற மாடுகள் இந்தப் பகுதியில் அதிகளவில் காணப்படுவ தால், அவற்றினை இனம் கண்டு கொள்ளமுடியாதிருப்பதாக உரிமை யாளர்கள் தெரிவித்தனர்.

பயிர்ச்செய்கை காலங்களில் இந்தக் கால் நடைகளினால் பயிர் கள் அழிக்கப்படுவதாக விவசாயி கள் புகார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து இவற்றினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆரா யும் கூட்டம் - எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை ,9.30 மணிக்கு கோயிலாக்கண்டி மகாவித்தியால யத்தில் நடைபெறவுள்ளது.

கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளின் உரிமையாளர்களை தவறாது கலந்து .கொள்ளுமாறு தனங்கிளப்பு மறவன்புலோ விவசாய சம்மேளனத்தின் தலைவர் லீலா விநோதன் தெரிவித்தார். (25)

### யாழ்.கல்வி வலயத்தில்

# பாடசாலை கல்வியை முடித்து விலகிய இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி

இளைஞர், யுவதிகளுக்கு தொழில வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் யாழ்.கல்விவலய முறை சாராக் கல்விப் பிரிவினால் தொழிற் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர், யுவதிகளுக்கு அடிப் படைத் தொழில் அறிவினை வழங் கும் நோக்குடன் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி நெறிகள் யாழ். மத தியகல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, சன்மார்க்க வித்தியால யம், ஆவரங்கால் சைவ மகாஜனாக கல்லூரி, நல்லூர் கந்தர் மடம் சைவப் பிரகாச வித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி, அச்சுவேலி சென். திரேசா மகாவித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி,சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை களில் இடம்பெற்று வருகின்றது.

இந்தப் பாடசாலைகளில் கணினி, கணினித்தட்டச்சு, வீட்டுமின் இணைப்பு, உடையமைத்தல், தலையலங்காரம் ஆகிய கற்கைநெறிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் எழுநூறு இளைஞர்கள், யுவதிகள் பயிற்சிபெற்று வருகின்றனர்.

# சின்னஞ் சிறு செய்திகள்

## 20 குடும்பத்துக்கு லயன்ஸ்கழகம் உதவி

வடமராட்சி லயன்ஸ் கழகத் தினர் பருத்தித்துறைப் பகுதி முகாம்களில் யுத்த அனர்த்தங் களால் பாதிக்கப்பட்ட 20 குடும் பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறு மதியான பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## உள்ளூராட்சி வாரத்தில் மயானம் சிரமதானம்

எதிர்வரும் வாரம் ஆரம்பமாகும் உள்ளூராட்சிவாரத்தை முன்னிட்டு, செம்மணி இந்து மயானம் நல்லூர்ப் பிரதேச சபையினரால் சிரமதானம் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் இடம்பெறவுள்ளது. பொதுமக்கள், பொதுநிறுவனங் களின் பிரதிநிதிகள், மாணவர்கள் இந்தச் சிரமதானத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சென்.ஜேம்ஸ் வித்தியாலயத்தில் கலைத்தமிழ் விழா

(நெடுந்தீவு)

குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண் கள் மகாவித்தியாலயத்தில் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை காலை தமிழ் விழா - கோலாகலமாக நடை பெறவுள்ளது.

இந்த விழாவினையொட்டி பாரம் பரிய தமிழ் கலை நிகழ்வுகளுடன், படகோட்டப் போட்டி, நீச்சற் போட்டி போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டிகள், விழாக்கள் சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற் பாடுகள் பெரும் எடுப்பில் முன்னெ டுக்கப்பட்டு வருவதாக வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (113)

## இளைஞர் தின நிகழ்வு

(வண்ணை)

வட-பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவன இளைஞர் பிரிவு நடத்தும் இளைஞர் தின நிகழ்வுகள் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் திருநெல்வேலி யில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள் ளது. (111)

## நியாப் உதவித்திட்டத்தில் 4 குளங்கள் புனரமைப்பு

நியாப் திட்டத்தின் கீழ் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், கமக் கார அமைப்புக்கள் மூலம் வடம ராட்சியில் நான்கு குளங்கள் 27 இலட்சம் ரூபா செலவில் புனர மைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை - சாளம்பைக்குளம், துன்னாலை - வேதற்களிக்குளம், கரவெட்டி - மத்தணிதாளங்குளிக் குளம், இமையாணன் - துவாலி குளம் ஆகியவனவே புனரமைக்கப் பட்டு அண்மையில் அந்தப்பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டது. (17)

## 'இயற்கை' திரைப்படக் காட்சி

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவில் திரைப்பட வட்டத்தினால் எதிர்வரும் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் ஜனநாதன் இயக்கத்தில் உருவான 'இயற்கை' எனும் முழுநீளத் திரைப்படம் காண் பிக்கப்படும். திரைப்பட முடிவில் விமர்சனமும், கலந்துரையாடலும் இட பெறவுள்ளது. திரைப்பட இரசணை யாளர் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு திரைப்பட வட்டத்தினர் வேண்டுகின்றனர்.

# புங்குடுதீவு சிறுப்பிட்டி வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு சிறுப்பிட்டி பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து குன்றும், குழியுமாக உள்ளதால் - அந்த வீதியூடாக பய ணிக்கும் பயணிகள், பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது, இந்தப் பிரதான வீதி யோரப் பிரதேசத்தில் பெருமளவு குடும்பங்கள் மீளக்குடியமரத் தொடங் கியுள்ளதாகவும் இந்த வீதியூடாக போக்குவரத்தும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் மக்களின் மீளக்குடியமர்வு நடவடிக்கையினை துரிதப்படுத்தவும், மீளக்குடியமர்ந்த வர்களின் நலனைக் கருத்தில் கொண் டும் இந்த வீதிப்புனரமைப்பினை மேற்கொள்ள வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (113)

# லயன்ஸ் கழகத்திற்கு புதிய நிர்வாகிகள்

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகிகள் பதவியேற்ற நிகழ்வு சதாவதாணி கதிரவேற் பிள்ளையால் அண்மையில் புலோலி மேற்கு சிக்கனக் கடனுதவி கூட்டுற வுச் சங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு லயன்ஸ் எஸ்.கதிர மலை தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஓய்வு பெற்ற சமூக உத்தியோகத்தர் எஸ்.தர்ம லிங்கம் தலைவராகவும், இலங்கை வங்கி முகாமையாளர் வி.எஸ்.சிவ நாதன், செயலாளராகவும் வர்த்தகர் கே.தங்கராசா பொரு ளாளராகவும் பதவியேற்றனர். (17)

# பாடசாலை மாணவர்களுக்கு நெடுந்தீவில் பற்சிகிச்சை நிலையம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள பாட சாலை மாணவர்களுக்கான விசேட பற்சிகிச்சை முகாம் - ஊர்காவற் துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த திங்கள் அன்று ஆரம்பமாகியது.

நெடுந்தீவு மாவட்ட வைத்தி யசாலை பற்சிகிச்சை நிலையத்தின் கட்டடத்தில் நாளைவரை இந்த சிகிச்சை நடைபெறவுள்ளது.

வேலணை, மருதனார்மடம் ஆகிய பகுதிகளின் பாடசாலை பற்சிகிச் சைப் பிரிவின் அனுசரணையுடன் இடம்பெற்று வருகின்றது.

பற்சிகிச்சை முகாமில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாடசாலை களில் கல்வி கற்கும் 13 வயதுக் குட்பட்ட மாணவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (113)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : ந. கார்த்திகன்
முகவரி : சுவிஸ்லாந்து

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :---------
முகவரி :---------
பிறந்த ஆண்டு:---------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------
பெற்றோர் ஒப்பம்




# எல்லாக் காலத்துக்கும் ஏற்ற பீற்றூட் உற்பத்தி

அபிவிருத்தி அடைந்து வரும் நம் நாட்டில், புதிய உற்பத்தி வகைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து, உற்பத்தி செய்யும் நடவடிக்கை முதன்முதலாக 1848 ஆம் ஆண்டில் 'சர்சமுவேல்மோர்'ரினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட மரக்கறி வகைகளில் ஒன்றான பீற்றூட் -மிகப்பிரபல்யமான, அதிக இலாபத்தைப் பெற்றுத்தரும் மரக்கறியாகக் காணப்படுகின்றது. மேலும் இந்த பீற்றூட் -ஐரோப்பா, வடஆபிரிக்கா ஆகிய நாடுகளில் முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.



தாவரப் பெயர் கொண்டும் அழைக்கிறார்கள்.

பீற்றூட்டைச் சம்பலாகவும் பயன்படுத்தலாம். அதன் இலைகளைக் கீரையாக உபயோகிக்கலாம். இதனுடைய் சிவப்புநிறம் காரணமாக, குழந்தைகள் இதனை விரும்பி உண்கிறார்கள்.

**பீற்றூட் உற்பத்திக்குத் தேவையான காலநிலை**

இது குளிர் மற்றும் உஷ்ண கால நிலைகளுக்கு ஒத்துப்போகும் மரக்கறியாக இருப்பதால், எல்லாப் பிரதேசங்களிலும் பயிரிடக் கூடியதாகவுள்ளது.

ஆரம்ப காலத்தில் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் மட்டும் உற்பத்தி செய்யப்பட்ட பீற்றூட் - பின்பு நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

பீற்றூட் உற்பத்தியின்போது நிலத்தின் மண் சிறப்பாக இருப்பதோடு, மண்ணின் பி.எச் அளவு 6.0-7.0 ஆக இருக்கவேண்டும். இதற்கு காபனீக் கலந்த மண் சிறந்தது. நன்றாக நீர் உறிஞ்சிக் கொள்ளும் தன்மை மண்ணில் இருப்பது மிக முக்கியமானதாகும். இந்த உற்பத்தியின்போது, வாய்க்கால்களைக் கொண்ட பாத்திகளை ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும்.

**பீற்றூட் இருவகையாகக் காணப்படுகின்றது அவையாவன -**

**1. கிரீம்சன் க்லோப்**

**2. டெட்ரொய்ட் டாக்**

இரண்டுமே பிரபல்யமானதாக விளங்குகின்றன. ஆனாலும், இந்த பீற்றூட் விதைகள் - வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்த பீற்றூட் வகைகளில - "கிரீம்சன் க்லோப்" என்ற வகை, பல விவசாயிகள் மத்தியில் பிரபல்யமாக விளங்குகின்றது. இந்த வகை பீற்றூட்டின் வெளிப்புறம் மற்றும் நடுப்பகுதிகள் சிவப்பும், நாவலும் கலந்த நிறமும் கொண்டதாகும். பீற்றூட்டின விளைச்சலைப் பெற்றுக்கொள்ள 70 - 90 நாட்கள் செல்லும். டெட்ரொயிட் கடும் சிவப்பு வகையைச் சேர்ந்த கிழங்கு - வட்டவடிவைக் கொண்டது.

**பதியப பாத்திகளை ஒழுங்கு செய்தல்**

பீற்றூட் விதைகளை உடனடியாக மண்ணில் விதைக்க முடியாது. பயிரிட முன் விதைகளைப் பதியப் பாத்திகளில் விதைத்து, வளரும் கன்றுகளைப் பெற்றுக் கொண்டு, வேறாகப் பயிரிட வேண்டும். பதியங்களை உருவாக்கத் தகுந்த நிலம் ஒன்றைத்தெரிவு செய்து, ஒரு மீற்றர் அகலமும், 10 மீற்றர் நீளமும் கொண்ட பாத்திகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பின்பு மண்ணை நன்றாக ஒழுங்கு செய்து, காபனிக் உரத்தையும் கலந்து கொள்ள வேண்டும்.

ஒழுங்கு செய்து கொண்ட பாத்திகளின் 10 செ.மீற்றர் அகலத்துக்கு, 1/2-1 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு விதைகளை விதைகக வேண்டும். அப்படி விதைக்கும்போது குறிப்பிட்ட இடைவெளிகளை அவதானித்து விதைப்பது நன்று.

காரணம்- ஒரு விதையில் 2-3 விதைக்கன்றுகள் முளைக்கும் தன்மை இந்தப் பீற்றூட் விதையின் சிறப்பாகும். ஒரு ஹெக்ரேயர் நிலத்தில் உற்பத்தி செய்வதற்காக 5-6 கிலோகிராம் பீற்றூட் விதைகள் தேவைப்படும்.

- இவ்வாறு ஒழுங்கு செய்து கொண்ட பதியங்களைத் தகுந்தவாறு பராமரிக்க வேண்டும். இதற்குத் தேவையான நீர் விநியோகம் செய்யவேண்டும். அத்துடன், சூரியஒளி படுமாறு பராமரித்துக் கொள்வதோடு, நோய்கள் ஏற்பட்டால் தகுந்த கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி தடுத்துக் கொள்ளவேண்டும். இதனால் மீள்நடுகைக்குத் தகுந்த சிறப்பான கன்றுகளைப் பெறலாம்.

**உற்பத்திக்கான நிலத்தைத் தயாரித்தல்.**

நிலத்தின் மண்ணைப் புரட்டி, மணகட்டிகளை உடைத்துக்கொள்ள வேண்டும். இதறகு 20 சென்ரிமீற்றர் - 30 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு மண்ணைப் புரட்டவேண்டும். இதன் பின்பு ஒரு மீற்றர் அகலமும், விரும்பியளவு நீளத்திலும் பாத்திகளை ஒழுங்கு செய்தல்வேண்டும். விரும்பின் உயரமான பாத்திகளைத் தயாரித்துக் கொள்ளலாம்.

**கன்றுகளைப் பயிரிடல்**

பாத்திகளுக்கு நன்றாக உக்கிய சாணத்தை உரமாகப் போட்டு, மண்ணோடு கலந்து கொள்ளவேண்டும். கன்றுகளைப் பயிரிடுவதற்கு 2-3 நாட்களுக்கு முன் - பிரதான உரத்தைக் கலந்துகொள்ளவேண்டும்.

பின்பு பதியங்களில் இருந்து எடுத்த நல்ல கன்றுகளைப் பயிரிடவேண்டும். மலையகப் பிரதேசங்கள் என்றால், 30 சென்ரிமீற்றர் அளவு இடைவெளி வரிசைகளுக்கிடையில் விடவேண்டும் இல்லையேல் கன்றுகளுக்கிடையில் 15 செனரிமீற்றர் இடைவெளி விடவேண்டும்.

உலர்வலயத்தில் என்றால், 30 சென்ரிமீற்றர் வரிசைகளின் இடைவெளியாக இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பீற்றூட் கன்றுகளின் தண்டின் மேல்பகுதிகளை வெட்டியும், ஆணிவேர்களின் கீழ்ப்பகுதியை வெட்டியும் பயிரிடுவது சிறந்ததாகும்.

**உரம் பயன்படுத்துதல்**

சிறப்பான விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக உரம் போடுதல் அத்தியாவசியமாகும். பிரதான உரமாக ஹெக்ரேயருக்கு 165 கிலோகிராம் யூரியாவும், 270 கிலோகிராம் சுபர் பொஸ்பேட்டும், 125 கிலோகிராம் மியுரியெட் ஓ·.ப் பொட்டாசும் போடவேண்டும்.

வெளி உரமாக 4 வாரங்களுக்குப் பின்பு ஹெக்ரேயருக்கு 165 கிலோகிராம் யூரியாவும், 125 கிலோகிராம் மியுரியெட் ஓ·.ப் பொட்டாசும் போடவேண்டும். இரசாயன உரம் அவ்வாறு போட்டாலும், முடிந்தளவு காபனிக் உரத்தைப் போடுவதில் அவதானம் செலுத்த வேண்டும்.

**பராமரிப்பு**

பீற்றூட் பராமரிப்பின்போது நன்றாக நீர் விநியோகம் மேற்கொள்ள வேண்டும். சிறுகன்றுகளாக நட்டதன் பின்பு, மண்ணின் ஈரத்தன்மையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக 3-4 நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகிக்க வேணடும்.

உலர்வலயப் பிரதேசங்களில், இது சம்பந்தமான முக்கிய கவனத்தைச் செலுத்த வேணடும். களைகளை நீக்கி, மண்ணைச் சுத்தமாக்கி வைத்துக்கொள்ள வேண்டும். கன்றுகளைப் பயிரிட்டு 3-4 வாரங்களில் அனைத்துக் களைகளையும் பிடுங்கிவிட வேண்டும்.

சில விவசாயிகள் பீற்றூட்டை இடைமரக்கறியாக உற்பத்தி செய்கின்றனர். முக்கியமாக மலையகப் பிரதேசங்களில் உற்பத்தி செய்திருப்பதைக் காணலாம். லீடஸ் மற்றும் கரட்டோடு சேர்த்து இடை உற்பத்தி செய்யலாம்.

கரட்டும், லீட்ஸூம் உற்பத்தி செய்யும் போது, அவற்றுக்கு இடையில் உள்ள இடைவெளிகளில் பீற்றூட் விதைகளைப் போடுவதோடு, கன்றுகளையும் முளைக்க வைக்கலாம். அதிகமாக வளரும் கன்றுகளைப் பிடுங்கிவிட்டு, பீற்றூட் பயிரைப் பராமரிக்கலாம். (விதைகளை விதைப்பதினால் கூடுதலான கன்றுகளை நீக்கி விடலாம்)

**உற்பத்தியைப் பாதிக்கும் நோய்கள்**

பதியப் பாத்திகளில் விதைகளை விதைக்கும்போது, பல பாதிப்புக்கள் ஏற்படலாம். நுண்ணங்கிகளால் ஏற்படும் இந்த நோயின் தாக்கத்தினால் சிறு கன்றுகள் வாடி, அழுகிவிடும்.

இதைத் தடுத்துக் கொள்வதற்காக "கெப்டான் பெணொமில்" போன்ற கிருமிநாசினிகளை உபயோகிக்கலாம். "கியன்" என்ற புழுவின் பாதிப்பு - கன்றுகள் நடுகை செய்த பின்பு ஏற்படும்.

இந்த நோயைத் தடுப்பதற்காக, "கலேரோபைரோபஸ்" அல்லது "ப்ரோதியோபஸ்" போன்ற கிருமிநாசினிகளை உபயோகித்துத் தடுத்துக் கொள்ளலாம்.

**விளைச்சல்**

நன்றாகப் பராமரித்த பீறறூட் கன்றுகளை, முளைக்க வைத்து 70-90 நாட்களுக்குப் பின்பு விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறான உற்பத்தியில் ஒரு ஹெக்ரேயருக்கு 10-15 மெட்ரிக்தொன் அளவு பீற்றூட்டைப் பெற்றுக்கொள்ளலாம். விளைச்சலைப் பெற்ற பின்பு - பீறறூட் கிழங்குகளின் மண்ணையும், வேர்களையும் முற்றிய இலைகளையும் நீக்கிச் சுத்தமாக்கிய பின்பு, விற்பனை செய்து கொள்வதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெறலாம்.

**- சசி சந்திரகாசன்**

# சுயதொழிலில் தனிவழி அமைத்து வெற்றிபெற முடியும்



விதை சிறிதாக இருக்கிறது என்பதற்காக, உள்ளே ஆலமரம் இல்லை என்ற உறுதியான முடிவுக்கு வந்துவிடக்கூடாது. அது போல்தான் சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதும். சிறிய முயற்சியே இதற்கான ஆரம்பம். பின்னர் முறையாக திட்டமிட்டு, தொழிலை நடாத்திச் சென்றால், தொடர்ந்து இலாபம் ஈட்டலாம்.

தனது சுயதொழிலில் வெற்றி பெற்ற ஒருவரின் கருத்துக்கள் இவை. நன்றாகப் படித்திருந்தால் மட்டும் வியாபாரம் செய்ய முடியாது. செய்யும் தொழிலின் மீது ஆர்வமும், உழைப்பும் வேண்டும்.

கையிலிருக்கும் பணத்தைக்கொண்டு சிறிய தொகையைக் கடன் வாங்கி வியாபாரத்தை ஆரம்பித்தேன். அந்தநேரத்தில் பெரிய நிறுவனங்கள் எல்லாம் மிகப்பெரிய விளம்பரங்களுடன் தமது பொருட்களை மக்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தன.

என்னிடம் போதியளவு பணம் இருக்கவில்லை. பொருட்களை மக்களிடம் இலவசமாக அறிமுகம் செய்யவேண்டி இருந்தது. தொடர்ந்து பாடுபட்டு உழைத்து, இன்று நல்ல நிலைக்கு வந்துவிட்டேன்.

என்னுடைய வெற்றிக்குக் காரணமென்று சொல்வதானால் - முதலில் நான் என்ன செய்யப்போகிறேன்? எப்படிச் செய்யப்போகிறேன்? என்று தெரிந்துகொண்டு செய்தேன்.

இரண்டாவது - நான் செய்யத் தொடங்கிய தொழிலை மனதார நேசித்தேன். அதனால் எப்பொழுதும் அது பற்றிய சிந்தனை மனதில் ஓடிக்கொண்டே இருக்கும்.

மூன்றாவது - முக்கியமான விடயம். எனக்கென்று ஒரு வழியை உருவாக்கி, வியாபாரத்தில் ஈடுபட்டது என்று தனது வெற்றிப்படிகளைச் சுட்டிக்காட்டுகிறார் அந்த தொழிலதிபர்.

எனவே, பெரிய பெரிய நிறுவனங்கள் வந்து விட்டது. அவர்களுடன் போட்டிபோட முடியாது என்று தொழிலிலிருந்து ஒதுங்குவதோ அல்லது தொழிலை ஆரம்பிக்கத் தயங்குவதோ வெற்றிக்கான வழியல்ல.

பெரிய நிறுவனங்களின் வழியில் போய், அவர்களுடன் போட்டிபோட்டு வெற்றிபெற முடியாது என்று கூறுவதைவிட, எமக்கென்று ஒரு தனிவழி அல்லது பாதை அமைத்து, அவர்களின் குறுக்கீடு இல்லாமல் வெற்றிபெறமுடியும்.

வெற்றிபெறுவதற்கு என்ன வேண்டும் என்பதைவிட, என்ன வேண்டாம் என்பதில் தெளிவு வேண்டும். வெற்றி இலக்கை ஒருவன் அடையவேண்டுமானால், அவனது எண்ணங்கள் பலமுனைகள் கொண்டதாக இருக்கக்கூடாது. ஒரு முனைப்பாக, ஒரு சிந்தனையாக அதிலும் தெளிவாக இருக்கவேண்டும்.

பிரபல நன்முனைப்புப் பயிற்சியாளர்கள் பலரும், தோல்வியாளர்களின் பொதுவான இயல்பு என்று ஒன்றைத் தவறாமல் குறிப்பிடுகிறார்கள். அது என்னவென்றால், இவர்கள் எது முக்கியம் என்பதையே அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான்.

தேவையற்றவற்றைக் கழித்து, நிர்மூலமாக்கித் தூக்கி எறியக் கற்றுக்கொண்டால், மீதமிருக்கும் வெற்றிகரமான மூலப்பொருட்களை வைத்தே, வெற்றிக் கலவையை உருவாக்கிவிட முடியும். இது அவசியமான பொருட்கள் மட்டும் உள்ள அலுமாரி, மணிபாஸ் போன்றவற்றிலிருந்து தேவையானவற்றை உடனடியாகத் தேடியெடுத்துவிட முடிவதை ஒப்பிடலாம். நீங்களும் சுயதொழில் என்ற வெற்றிப் படிகளில் ஏறலாமே!

பொதுசன நூலகம்

# போஷாக்கு உணவுப் பொதி தயாரித்தல்



இன்று எமது பிரதேசத்திலுள்ள பொதுவான ஒரு பிரச்சினை போஷாக்கின்மையாகும். போஷாக்கைத் தரக்கூடிய உணவுவகைகளை எமது சூழலில் பெறக்கூடியதாக இருந்தும், அவற்றை நாம் உரியமுறையில் பயன்படுத்துவதில்லை.

உழுந்து, பயறு, சோயாஅவரை ஆகியவற்றைக் கொண்டு தரம்வாய்ந்த போஷாக்கு உணவைத் தயாரிக்க முடியும். இந்த உணவை சிறியோர் முதல் முதியோர்வரை பயன்படுத்தலாம்.

குறுகியகாலப் பயிற்சியுடன் அல்லது அனுபவத்துடன் இத்தொழிலை ஆரம்பிக்கலாம். உழுந்து, பயறு, சோயாஅவரை ஆகியவற்றைச் சமஅளவில் எடுத்து (உழுந்தைச் சற்று அதிகமாகவும் சேர்க்கலாம்) இவற்றைத் தனித்தனியே வறுத்தெடுக்க வேண்டும். பின்பு இவற்றை ஒன்றாகக் கலந்து அரைத்து, பொதிசெய்தல் வேண்டும்.

இதற்குத் தேவைப்படும் உபகரணங்கள் - அரைக்கும் திருகை, வறுப்பதற்கான தாச்சி, தராசு, பொதிசெய்வதற்கான பொலித்தீன் ஆகியனவாகும்.



போஷாக்கு உணவுக்கான தானியவகை பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவதால், வீடுகளில் ஓர் உபதொழிலாகவே இதனைச் செய்ய முடியும். உழுந்து, பயறு, சோயா அவரை ஆகியவை அறுவடை செய்யப்படும் காலங்களில் இவற்றின் விலை மலிவாக இருக்கும்.

இந்தக் காலங்களில் இவற்றைக் கொள்வனவு செய்து, பேணிப் பாதுகாத்து வைத்து, பின்னர் உற்பத்தியின் பொருட்டு பயன்படுத்தலாம். இந்த உணவு வகையை வீடுகளில் இலகுவாகப் பயன்படுத்த முடியுமாகையால், நல்ல வருமானம் கிடைக்கும்.

# மாவிலிருந்து தின்பண்டங்கள் தயாரித்தல்



எமது மக்களின் உணவு வகைகளில் மாவினால் தயாரிக்கப்படும் தின்பண்டங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பாண், பணிஸ், கேக், பற்றீஸ், கட்லெட், மோதகம், வடை, சுசியம் போன்ற பல்வேறு உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம், பெருமளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகள், அலுவலகங்கள், கோயில்கள், உணவுச்சாலைகள் ஆகிய இடங்களிலும், பொது மக்கள் கூடுமிடங்கள், போக்குவரத்துச் சாலைகளிலும், கொண்டாட்டங்களின் போதும் இவற்றுக்கான சந்தை வாய்ப்பு பெருமளவு காணப்படுகிறது.

இவற்றின் தயாரிப்பு முறை மிகவும் இலகுவானது. ஒவ்வொரு வகையான தின்பண்டத்தையும் செய்வது பற்றிய அறிவு இன்றியமையாதது. சுகாதாரமான முறையில் தயாரித்தல், சுகாதாரமான வழிமுறைகளைப் பயன்படுத்தி பாதுகாத்தல் அவசியம்.

குறுகிய காலப்பயிற்சியுடன் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம்.

துணைக்கு ஒரிருவரைச் சேர்க்கலாம் அல்லது குடும்ப அங்கத்தவர்களே ஈடுபடலாம். வீட்டிலிருந்தபடியோ அல்லது சிறு கட்டடத்தை வாடகைக்கு எடுத்தோ உபதொழிலாகவும் மேற்கொள்ளலாம்.

இதற்குரிய மூலப்பொருட்கள் - கோதுமை மா, சீனி, ஈஸ்ரால் தயாரிக்கப்படும் உணவு வகைகளுக்கேற்பவும் மூலப்பொருட்கள் மாறுபடலாம்.

உபகரணங்களாக - அவண்(சிறிய போறணை அடுப்பு), உணவு வகைகளைச் சூடாக வைத்துக்கொள்ளும் உபகரணம், கண்ணாடி அலுமாரி, மேசை, மரத்தாலான ரோலர், கத்தி, பிரஷ், சுழற்றும் கருவி, உணவை எடுக்கும் கருவி, பாத்திரங்கள் போன்றவை தேவைப்படும். உணவுச்சாலை நடத்துநர்கள், கொண்டாட்ட ஒழுங்குபடுத்துநர்கள் ஆகியோருடன் தொடர்பு கொள்வதன் மூலம், உற்பத்தியை அதிகரித்து அதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

# ஒரு நிறுவனத்தில் காரியதரிசியின் பொறுப்புக்கள்

ஒரு நிறுவனத்தின் இயக்குநர் அல்லது மேலாளர் -அந்த நிறுவனத்தின் பிரதிநிதியாக விளங்குகிறார். நிறுவனத்தின் நன்மையான செயற்பாடுகளிலும் சரி, நிறுவனத்துக்கு களங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளாயினும் சரி, அல்லது நிறுவனம் பதில் சொல்ல வேண்டிய விடயங்கள் எவையாயினும் சரி, பதில்சொல்ல வேண்டியவர் நிறுவனத்தின்



இயக்குநர் அல்லது மேலாளராவார்.

இவ்வாறு பதில் சொல்ல வேண்டியவரான மேலாளர் - நிறுவனத்தின் அனைத்து விடயங்களையும் கண்காணிக்கும் பொறுப்புமிக்கவராகவுள்ளார். அத்தகைய பொறுப்புமிக்க ஒருவர் - தனித்து அனைத்து விடயங்களையும் கவனிக்க முடியாது என்பது யதார்த்தபூர்வமானது.

இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டதன் காரணத்தினாலேயே, காரியதரிசி என்ற ஒரு பதவி காணப்படுகிறது. நிறுவன இயக்குநர் ஒருவர் - காரியதரிசியை வைத்துக் கொள்வதன் தேவையை இதனால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்த வகையில் காரியதரிசி ஒருவர் நிறுவனத்தின் இயக்குநரின் பொறுப்புகளை, அவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் ஒருவராகிறார்.

இயக்குநரின் வேலைகள் யாவற்றையும் தன்மனதிலே இருத்திக்கொள்கிறார். அவருக்கு இருக்கும் பொறுப்புகளைச் சரியாகச் செய்வதில் துணைபுரிகின்றார்.

நிறுவன இயக்குநருக்கு, ஏனைய நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறு இடங்களிலிருந்து கடிதங்கள் வருகின்றன. அந்தக் கடிதங்கள் அனைத்தையும் இயக்குநர் ஒருவரே பார்த்துவிடமுடியாது. இந்த நிலையில் கடிதங்களைப் பிரித்தெடுத்து, எவற்றுக்கெல்லாம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமோ, அவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒரு காரியதரிசியானவர் இயக்குநரிடம் அனுப்புதல் வேண்டும்.

காரியதரிசி தருகின்ற முன்னுரிமை அடிப்படையில் வகுக்கப்பட்ட கடிதங்களை இயக்குநர் பார்த்து, அவற்றின் சந்திப்புக்களை ஒழுங்கு செய்வார். இயக்குநரை சந்திப்பதற்கு அழைப்பு விடுத்தவர்களுக்கு, சந்திக்க இருக்கும் நேரத்தைக் கொடுத்தல் அல்லது சந்திப்பைப் பிற்போடுதல் போன்ற நடவடிக்கைகளை அவர் செய்து கொள்வார். முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட கடிதங்கள் இயக்குநரிடம் காரியதரிசியினால் சமர்ப்பிக்கப் படும்போது, அது இயக்குநருக்கு பேருதவியாக அமையும்.

மற்றும் இயக்குநருக்குத் தேவையற்ற தொலைபேசி அழைப்புக்கள் வரும்போது, அவரின் நேரம் விரயமாகிறது. இந்தச் சந்தர்ப்பங்களில் காரியதரிசியின் செயற்பாடு மிகவும் இன்றியமையாததாகின்றது. தேவையற்ற தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்த்து, தேவையான தொலைபேசி அழைப்புக்களுடன் மட்டும் தொடர்புகொள்ளவேண்டும். இது இயக்குநரின் நேரத்தை மீதப்படுத்தும் பணியாக அமைகிறது.

அலுவலகத்திலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை, நிறுவனத்தின் வழமையான கடிதத் தொடர்புகளை காரியதரிசியே மேற்கொள்வதன் மூலம். இயக்குநரின் நேரம் மிச்சமாகிறது.

அடுத்தது இயக்குநரின் மேசையில் காணப்படுகின்ற தாள்களையும், பத்திரங்களையும், முக்கியமான ஆவணங்களையும் ஒழுங்குபடுத்துவது காரியதரிசியின் பணியாக அமைகின்றது. அத்துடன், தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்துகின்றபோது, தொடர்புகள் இலகுவில் கிடைத்துவிடுவதில்லை. இதனைத் தவிர்த்து, காரியதரிசி மூலமாக தொலைத் தொடர்புகளை ஏற்படுத்துவது பயனுடையதாகிறது.

ஒரு நிறுவன இயக்குநரின் நேரத்தை மீதப்படுத்துவதில் காரியதரிசியின் பங்கு மிகவும் முக்கியமானதொன்றாக அமைகிறது என்பதை இவற்றின் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

இதேவேளை, காரியதரிசியை மட்டுமே நம்பிப் பொறுப்புக்களை ஒப்படைக்கும் இயக்குநா ஒருவரினால் சிறப்பாக தனது செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது என்பதும் உண்மையே.

நம்பிக்கைக்குரிய காரியதரிசியை தெரிந்து கொள்வது அதிமுக்கியமான விடயமாகிறது. நம்பிக்கைக்குத் துரோகமிழைத்து, நிறுவனத்தின் நன்மைகளுக்கு இடையூறாக விளங்கும் காரியதரிசியை இனம்கண்டு கொள்ளவேண்டியதும் இயக்குநரின் பாரிய பொறுப்பாகும்.

- பூ.நகுலன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 60/= | 70/= | 60/= | 50/= | 40/= | 50/= |
| வெண்டிக்காய் | 20/= | 25/= | 40/= | 20/= | 20/= | 40/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 75/= | 80/= | 80/= | 85/= | 80/= | 90/ |
| கத்தரிக்காய் | 30/= | 30/= | 40/= | 40/= | 45/= | 40/= | 30/= |
| பாகற்காய் | 60/= | 60/= | 60/= | 60/= | 70/= | 60/= | 40/= |
| கரட் | 60/= | 80/= | 80/= | 80/= | 70/= | 80/= | 70/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 50/= | 35/= | 35/= | 50/= | 50/= |
| முருங்கக்காய் | 120/= | 110/= | 120/= | 100/= | 120/= | 160/= | 90/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 40/= | 35/= | 40/= | 50/= | 65/= |
| பச்சை மிளகாய் | 40/= | 45/= | 60/= | 35/= | 40/= | 40/= | 40/= |




பணக்காரனாக வேண்டுமானால், வறுமையை உண்டாக்கும் வழிகளைப் பற்றியே சிந்திக்காமல், வழமையை உண்டாக்கும் வழிகள் பற்றித்தான் சிந்திக்க வேண்டும்.

பணக்காரனாக முதலில் தீர்மானிக்க வேண்டும். எந்த வழியில் செல்ல விரும்புகிறீர்களோ அந்த வழியில்தான் செல்வம் சேரும். அர்ப்பணிப்பு உணர்வுடன் மனதைக் கட்டுப்படுத்தி, செயலில் மட்டுமே கவனத்தை ஒருமுகப்படுத்தினால் செல்வம் சேரும். பணக்கார உணர்வை ஏற்றுக்கொண்டால் அதை நிஜ நிகழ்ச்சிகளால் பாதிப்படையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். எதையும் மனத்தால் கட்டுப்படுத்தி, செயலால் நாம்தான் உருவாக்க வேண்டும். நீங்கள் ஏழையாக அல்லது பணக்காரனாக இருந்தாலும் சரி, நீங்கள் எதை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டு கவனமாக உழைக்கிறீர்களோ அதுதான் உங்களுக்கு உறுதியாகக் கிடைக்கும். எனவே, பொருளாதார உயர்வு, கல்வி, மாபெரும் வெற்றி முதலியன உங்களின் தீவிரமான மனதின் விருப்பத்தைப் பொறுத்தே உள்ளது. இதுவே வெற்றிகரமான வாழ்வின் இரகசியம்.

புதிய ஆசிரியத்துவ உருவாக்கம் — பா.தனபாலன்

# தேசிய கல்வி முறையின் அச்சாணியான ஆசிரியர்கள்



ஆசிரியத்துவ உருவாக்கம்

ஆசிரியருக்கும், மாணவருக்கும் இடையே நிகழும் தெளிந்த உறவாடலே புதிய ஆசிரியத்துவ உருவாக்கமாக மிளிர்கின்றது. இதற்கு

i. ஆசிரியர்களின் கள அனுபவம் மற்றும் மாணவர்களுக்குக்கற்கை வழிகாட்டல் மூலம் ஏற்படும் - செயன்முறை அனுபவம்

ii புதிய செயல் நிலை ஆய்வுகள் (**Action Research**) செயற்திட்டங்கள் மூலமான - புத்தாக்கங்கள் (**Innovative**) புதிய சீராக்கங்கள் (**Modefictions**)

iii. நடைமுறை செயலாற்றுகைகள் மூலமான அனுபவங்கள்

iv. போதனா முகாமை, கற்கக் கற்றல் தேர்ச்சி சுயாதீனமாகக் கற்றல் கோட்பாடுகள், தத்துவங்கள் தொடர்பான - எண்ணக்கருக்கள்

ஆகிய செயலாற்றுகைகள், தத்து வார்த்த பாவனை சாட்சிகளைத் தேடுதல் பிரச்சினைகளைத் தீர்க்க ஊக்குவித்தல், கல்வியை வாழ்வியலுடன் இணைத்தல் செயற்பாடுகளுக்கான வாண்மைத்துவப் பயில்வு தொடர்பான விழிப்புணர்வுகள் தொடருறு ஆசிரிய பயில்வுகளினூடாக வழங்கப்பட்டமையை ஆசிரிய வாண்மை விருத்தி தினம் பறை சாற்றியது. இதற்கான ஒழுங்கமைப்புக்கள் இரவு பகல் பாராது செய்த அனைத்து கல்வியாளர்கள், பணியாளர்களின் சேவைகள் மெச்சத்தக்கன.

**எதிர்காலவியல்**

இதுவரை நடந்து வந்த கல்விப் பாதையைவிட இனி நடக்கப்போகும் பாதை சிரமமானதாகவே இருக்கும். இந்தப் பணியில் வெற்றியடைய ஆசிரியர்களது மாற்றம் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கு மிகவும் முக்கியமானது. எல்லா ஆசிரியர்களும் புதிய அபிவிருத்திக்கான மாற்றங்களை அவர்களின் தேவை கருதி மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ற வண்ணம் அவர்களது வாண்மை தொடர்ச்சியாக மேம்படுத்தப்படவேண்டும். இதற்கு, உலகமயமாதல், தகவல் தொழிநுட்ப அறிவை ஆசிரியர்கள் பெறவேண்டும். அவரவர் துறையில் நிபுணர்களாக, ஆய்வாளர்களாக இருக்க வேண்டும்.

சமூக அபிவிருத்தி நிலை மாற்றத்தில் ஆசிரியர்கள் மாற்றத்தின் முகவர்களாக (**change Agents**) தொழிற்படல்

ஆசிரியர் தொடர் கல்வியை உள்ளடக்கிய வாழ்நாட் கல்வி முறைமையைத் தொடர்தல்.

அறிவுக்கு மெருகூட்டும் பகுத் தறிவான செயற்பாடுகளை மேற் கொள்ளல்.

நவீன கல்வி உளவியல் அணுகு முறைகளைப் பின்பற்றுதல்.

சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப இயை பாக்கமடைதல்

தொடர்பாடல் சக்தி கொண்டவராக இருத்தல்.

இவ்வாறு ஆசிரியர்கள் தமது ஆற்றல்களை, வாண்மையை விருத்தியாக்க புதிய பயில்வுகளையும், வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும், ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்கான வழிப்புணர்வுகளையும் இந்த ஆசிரியர்கள் வாண்மை விருத்தி தினம் பறைசாற்றியது.

மேலும் ஆசிரியரின் பொறுப்புக்கள் சரியாக நிறை வேற சமூகமும் ஒத்துழைக்க வேண்டும். மரியாதைகளை வழங்க வேண்டும். தற்காலத்தில் சில ஆசிரியர்களால் ஏற்படும் தவறுகளைத் தவிர்ப்பதற்குரிய மனோ. ரீதியான ஊக்குவிப்பு அதிலிருந்து ஆசிரியரை மீட்சிபெறச் செய்யும் சக்தி சமூகத்திடம் ஆக்கபூர்வமாக ஏற்பட வேண்டும் தேசத்தைக் கட்டியெழுப்புபவர்களாகிய ஆசிரியர்களுக்கு அதற்காகத் தேவைப்படும் தைரியத்தையும், ஆற்றலையும் பெற்றுக் கொடுப்பது முழுச் சமூகத்தினதும் - நாட்டினதும் விலக்க முடியாத பொறுப்பாகும். ♦

## நூல் நோக்கு... - பூஞ்சிட்டு

**நூல் :- கல்வியில் முன்னேற.... (உளவியல் கட்டுரைகள்)**

**ஆசிரியர்:- திருமதி பி.எவ். சின்னத்துரை**

**வெளியீடு:- 'நான்' வெளியீடு யாழ்ப்பாணம்**

**விலை:- 100 ரூபா**




பாடசாலை மாணவர்களின் கல்வி நாட்டத்தினை கலைக்கும் கவனக் கலைப்பு சாதனங்கள் தற்போது நாட்டில் பெருகியுள்ளன. ஒரு மாணவன் கல்வியில் முன்னேற்றம் காண்பதற்கு மன ஒருமைப்பாட்டுடன் கற்க வேண்டிய தேவையுள்ளது.

கல்வி கற்பதன் மூலமாக நாட்டின் நல்ல பிரஜையாக மாறவேண்டிய - மாற வேண்டும் என்கின்ற நோக்கங்கள் மாணவர்களிடையே எப்போதும் வேரூன்றி உள்ளன.

கல்வி தொடர்பான செயற்பாடுகளில் மாணவர்கள் கல்வி கற்க வேண்டியவர்களாகின்றனர். ஆசிரியர்கள் கல்வியறிவு ஊட்டுபவர்களாகியுள்ளனர். கல்வியை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் பெற்றோர் மிகவும் அக்கறையுடையவர்களாக இருக்கின்றனர்.

மாணவர், ஆசிரியர், பெற்றோர் ஆகிய கல்வி தொடர்பான மூன்று பகுதியினருக்கும் ஏற்ற வகையில் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவதற்கு உரிய வகையில் எழுதப்பட்ட நூல் ஒன்று வெளியாகியுள்ளது.

'கல்வியில் முன்னேற' என்ற தலைப்போடு வெளிவந்திருக்கும் இந்த நூல் பி.எவ்.சின்னத்துரை என்பவரால் எழுதப்பட்டுள்ளது. பி.எவ். சின்னத்துரை ஆசிரியராய், அதிபராய், சிறந்த குடும்பத் தலைவியாய் இருந்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உளவியல் சஞ்சிகையான 'நான்' என்ற உளவியல் சஞ்சிகையில் அவ்வப்போது வெளிவந்த பி.எவ். சின்னத்துரையின் உளவியல் கட்டுரைகள் தற்போது 'நான்' வெளியீடாக கட்டுரைத் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது.

நூலின் ஆசிரியர் ஒரு அதிபராகப் பணிபுரிந்தமையால் நிறைந்த ஆளுமைகளைப் பெற்றிருப்பார் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாதது. தான் பெற்ற ஆளுமைகளையும் இந்த நூலிலே அவர் பயன்படுத்தியுள்ளார்.

கல்வியில் முன்னேற என்ற இந்த நூலில் 21 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த 21 கட்டுரைகளும் உளவியல் சார்ந்த விடயங்களைக் கூறுவனவாக உள்ளன.

உளவியல் சார்ந்த தமிழ் நூல்கள் இலகுவாகக் கிடைப்பதில்லை என்ற பொதுவான கருத்து ஒன்று உள்ளது. உளவியல் துறையானது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு புதிய துறையாகவும், வளர வேண்டிய துறையாகவும் அமைந்துள்ளது. இந்த நிலையில் பி.எவ். சின்னத்துரையின் கல்வியில் முன்னேற என்ற நூல் ஆக்க முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டிய முயற்சியாகும்.

அறிமுறையும், அனுபவங்களும் என்ற இரு பரிமாணங்களைக் கொண்ட உளவியலில், இருதுறைகளிலும் இந்த நூல் ஆசிரியர் ஆற்றல் மிக்கவராக விளங்குகின்றார்.

பட்டப்பின் படிப்பில் உளவியல் சார்ந்த அறிகை ஊடகங்களைப் பெற்றும் ஆசிரியராக, அதிபராக, மாணவர்களுடன் ஊடாட்டங்களை அனுபவித்தும் வந்த படி மலர்ச்சியை இந் நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன.

அனுபவம் மிக்க ஆசிரியர்களும். அதிபர்களும் இவ்வாறான நூலாக்கங்களை மேற்கொள்ளும் போது பயனுள்ள பல தகவல்களைப் பெறக்கூடியதாக உள்ளது.

மாணவர்கள், பெற்றோர், தொண்டு நிறுவனங்கள் வாசித்து விளங்கக் கூடிய இலகுவான மொழி நடையினையும் எண்ணக் கருத்துக்களையும் நூலாசிரியர் இந்த நூலில் பயன்படுத்தியுள்ளார். அறிவும், அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்கள் எல்லோரும் எழுதுவதுமில்லை. அதை நூலுருப்படுத்த முறைவதுமில்லை. இதற்கு மாறாக நூலாசிரியர் இந்நூலை எழுதியுள்ளார்.

தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியம் பாதுகாக்கப்படவும், அது உளவியல் ரீதியாக அணுகப்படவும் தமது 13 வருட ஆசிரியப் பணி 15 வருட அதிபர் பணி என்ற அறிவு அனுபவம் மிக்க கண்ணோட்டத்தில் இந்நூலை ஆசிரியர் படைத்துள்ளார்.

ஆசிரியரின் இந்த நூலினை அனைவரும் படித்துப் பயன் பெறுங்கள். □□□

## ஒரு நிமிடம் சிந்திப்போம்...

# சுத்தமாக இருக்கும் பொழுது மனம் புத்தெழுச்சி பெறுகின்றது

குழந்தைகள் மண் விளையாடுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள், இதனால் சாப்பிடுவதற்கு முன்பு நன்றாக அவர்களின் கைகளைச் சுத்தம் செய்ய வேண்டியது அவசியம்.

வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் சுத்தமற்ற தன்மையினால் தான், குழந்தைகளை இலகுவாகத் தாக்குகின்றன. இந்த நோய் உயிர்களைக் கூட பலி எடுக்கின்றது.

'சுத்தம் சுகம் தரும' என்பதற்கிணங்க, சுத்தமாக இருப்பது சுகமான வாழ்வுக்கு முக்கிய மார்க்கமாகும். சுத்தமாக வாழ்வதற்கு அனைவரும் பழகிக் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறி சுத்தம் பார்க்கின்றவர்களாக இல்லாது விட்டாலும், கழிவறைக்குச் சென்று வந்த பின்போ, குழந்தையின் கால்களைக் கழுவிய பின்போ, குழந்தைகளின் கழிவுகளை அகற்றி அவர்களின் துணிகளைத் தோய்த்த பிறகோ, சாப்பிட உட்காருவதற்கு முன்போ, உணவை சமைப்பதற்கு முன்போ, கைகழுவுவதை ஒரு பழக்கமாகக்கிக் கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல - தீங்கு விளைவிக்கும் கிருமிகள் அல்லது வைரஸ் கிருமிகள் நம்மிடமிருந்து மற்றவர்களிடம் தொற்றிக் கொள்ள வாய்ப்பிருப்பதாகத் தோன்றும். எனவே எந்தச் சூழலிலும் கைகளைக் கழுவவேண்டும்.

சுகாதாரம் மற்றும் வெப்ப மண்டல மருத்துவத்துக்கான லண்டன் பள்ளியின் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துக் கூறிய கருத்துக்கள் - சரியான முறையில் கை கழுவினால், வயிற்றுப் போக்கு சம்பந்தப்பட்ட நோய்கள் 43 சதவீதம் குறையும் என்றும், பிள்ளைகளைப் பழிவாங்கும கொலையாளர்களில் முதலாம் இடத்தில் இருக்கும் சுவாச மண்டல நோய்களையும், கூட இதன் மூலம் பெருமளவு குறைக்கலாம் என்றும் கூறுகின்றது.

வறுமையில் வாடுவோர் நினைக்கலாம், நான் சுத்தமாக இருக்க நிறைய உடை எம்மிடம் இல்லையே என்று. ஆனால், இருக்கின்ற உடைகளைத் தோய்த்து சுத்தமாக உடுத்துவது பிரதானம். சுத்தமற்று வாழ்வதற்கு வறுமையைக் காரணம் காட்டக் கூடாது. ஏனெனில், தண்ணீர பணம் கொடுத்து வாங்குவதல்ல வறுமையில் வாடுவோரும் நன்றாகக் குளித்து – தோய்த்து வாழ முடியும். இதனால், சுத்தத தினைப் பேணிக கொள்ளமுடியும்.

தண்ணீர் இல்லாத பாலைவனத்தில் வாழ்வது போல் சிலர் தமது உடல்களை – உடைகளை சுத்தமாக வைத்திருக்க பின்னிற்கின்றார்கள்.

நாம் அடுத்தவர் முன்பு இருக்கின்ற போது, அவர்கள் அருவருககாத வகையில், நாம் சுத்தமாக இருப்பது அவசியம்.

வியர்வைமணம் தாங்க முடியாத அளவுக்கு புளிச்சல் உடைகளை உடுத்திக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அடுத்தவர் முன்பு தோன்றும் போது, அவர்கள் இவர்களை அருவருத்தே எதிர்கொள்கின்றார்கள். இவை உறவுக்கு பகையாக அமைகின்றன. இதனால், இயன்றளவு உள்ளாடைகளையும் – ஆடைகளையும் அடிக்கடி தோய்த்து நன்றாகக் குளித்து வாழ்கின்ற போது, ஆரோக்கிய வாழ்வுக்கு நன்மை விளைவிக்கும்.

பெரியவர்கள் சுத்தமாக இருக்கும் போதே சிறியவர்களையும் சுத்தமாக வைத்திருக்க முடியும். ஏனெனில், அவர்களைப் பார்த்தே சிறுவர்களின் நடத்தைகள் அமையப் பெறுகின்றன.

முன்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு சுத்தத்தைப் பற்றிக் கற்றுக் கொடுக்கவேண்டும். சுத்தமான வாழ்க்கை முறைகள், அதனால் ஏற்படும் நன்மைகள் – சுத்தமற்று வாழ்கின்ற போது ஏற்படும் தீமைகள் பற்றியும் எடுத்துக் கூறுகின்ற போது, பிள்ளைகள் வளர்ந்து வருகின்ற காலத்தில் அதனைக் கைக் கொண்டு வாழ்வார்கள்.

சுத்தமற்று இருக்கும் போது, மனமும் சலிப்புக் கொள்கின்றது. ஆனால, சுத்தமாக இருக்கும் போது மனம் புத்தெழுச்சி கொள்கின்றது. நோயற்ற வாழவே குறைவற்ற செல்வம் இந்தக் குறைவற்ற செல்வத்தை அனுபவமாக்க சுத்தமாக வாழ்வதே பிரதான காரணமாக அமைகின்றது. சிந்திப்போம்... செயற்படுவோம்...

- ராதவல்லி

பொது சன நூலகம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு*
*அல்லவை செய்தொழுகும் வேந்து.*

திருக்குறள

## நமது நோக்கு

### யுத்த பீதி

சமாதான முயற்சிகளில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகத் தேக்கமான சூழ்நிலை நிலவி வந்தாலும், கடந்த சில மாதங்களாக நிலைமை மோசமடைந்து வருகிறது.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவைப் பயன்படுத்திக் கொண்டு கிழக்கின இயல்பு நிலையைச் சீர்குலைப்பதற்குப் படைத்தரப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் தான் இந்த நெருக்கடிகளுக்குக் காரணமாகும்.

புலிகளுடன் மீளவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்த ஜனாதிபதி சந்திரிகா- திடீரென தனது நிலையில் இருந்து பின்வாங்கி இறுதித் தீர்வுக்கான பேச்சுக்களையே புலிகளுடன் நடத்த முடியும் என அறிவித்தார்.

புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார வரையறையைத் தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டு, இறுதித்தீர்வு என்று காலத்தை இழுத்தடிக்கும் பேச்சுக்களை நடத்தவே ஜனாதிபதி சந்திரிகா விரும்புகிறார்.

இந்த நிலைப்பாட்டினால், சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்த சூழ்நிலையில் தான்- இன்னொரு புறத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கேள்விக் குறியாக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

சமாதான முயற்சிகள் தேக்கமடைந்தாலும், யுத்தபயம் இன்றி இருந்த மக்களுக்கு இப்போது யுத்தப் பீதி தொற்றிக் கொண்டிருக்கிறது.

காரணம் கிழக்கில் கருணாவைப் பயன்படுத்தி, படைத்தரப்பு, புலிகளை வேட்டையாடும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கின்றது. மட்டக்களப்பில் படையினரின் உயர் பாதுகாப்பு மிக்க- பகுதிகளில் வைத்து நான்கு புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

புலிகளின் பிரதேசத்தில் பத்துப் புலிகள் வரை கொல்லப்பட்டிருந்தாலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து புலிகள் கொல்லப்பட்டமை பாரதூரமானதாகவே கருதப்படுகிறது.

புலிகள் மீது கிழக்கில் வேட்டை நடத்தும் இராணுவப் புலனாய்வுத்துறையினரும், கருணா குழுவும் தான் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கேள்விக்குரியதாக்கும் பிரதான காரணமாகும்.

இன்னொரு வகையில் கருணா எங்கிருக்கின்றார் என்று தமக்குத் தெரியாதெனக் கூறிக்கொள்ளும், அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் அமைச்சர் ஒருவரே கருணாவுடனான தொடர்புகளை ஒப்புக்கொண்டுள்ளார்.

அமைச்சர் ஒருவருக்கு கருணாவுடன் தொடர்பு இருக்கின்றதென்றால்- அதில் அரசாங்கத்திற்குத் தொடர்பில்லை என்று கூறிவிட முடியாது. அரசாங்கத்திற்தானே அவரும் அங்கம்வகிக்கிறார்.

அப்படியிருக்க, எவ்வாறு கருணாவுக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும கிடையாது என்றும், அவருக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை என்றும் கூறமுடியும்.

இப்படிப்பட்ட அரசின் இரட்டை வேடப்போக்கும், புலிகள் மீதான தாக்குதல்களும் தான், போர்நிறுத்த உடன்பாட்டை நெருக்கடிக்குள்தள்ளின.

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புடன், மக்கள் மத்தியில் மட்டுமன்றி நோர்வே அரசாங்கத்திற்கும் இந்த யுத்தபீதி ஏற்பட்டுவிட்டது.

இதனால்தான் நோர்வேப் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஓடியோடி நிலைமையைச் சீராக்க முயற்சி எடுத்து வருகிறார்கள்.

நோர்வேப் பிரதிநிதிகளின் இந்த ஓட்டததிற்கு இது வரை சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. கருணாவைக் கைவிட்டு விட்டுப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராகவும் இல்லை.

கருணாவைத் தாமே பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு, புலிகளுடன் முரண்படவும் அரசு தயாராக இல்லை.

ஆனால், புலிகளைப் பொறுத்த வரையில் இப்போது அரசு யுத்தத்தைத் திணித்தால் அதனை எதிர்கொள்ளத் தயார் என்ற நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

அரசின் முரண்பட்ட போக்கினால் ஏற்படும் யுத்த பீதி- உடனடியாகத் தணிவதற்கு சாத்தியமில்லை என்பதையே நோர்வேப் பிரதிநிதிகளின்- நடந்து முடிந்த பேச்சுக்கள் மூலம் உணரமுடிகிறது. இது தான் உண்மை.

## நாடும் நடப்பும்




## கூட்டமைப்பு எம்பிக்களை

# பதவி விலகக் கோருவதற்கு ஜே.வி.பி.க்கு அதிகாரம் இல்லை

### சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்டு வரும் கருத்துக்களை, கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கண்டித்துள் ளார்.

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச வழங்கியுள்ள செவ்வியொன்றின்போது, தமிழ் தேசிய கூட்டமைப்பை நாடாளுமன்றத்திலிருந்து விரட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி தலைவரின் இந்தக் கருத்துக்கள் தொட ர்பாக விளக்கமளித்தது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பி. தெரிவித்து வரும் விசமத்தனமான கருத்துக்களின் மூலம் தம்மை மீண்டும் ஆயுதமேந்திப் போராடுங்கள் எனத் தூண்டுவது போல் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் தரப்பின் பிரதான பங்காளிகளாக தற்போது செயற்பட்டு வரும் ஜே.வி.பி. முன்னர் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மைப் பொறுத்த வரையில், மக்களின் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டதன் பின்னர், அஹிம்சை வழியில் போராடி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போனதையடுத்தே, ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

எனினும், இன்று ஜே.வி.பி. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்த வண்ணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக விசமத்தனமான கருத்துக்களைத் தெரிவித்து வருவதா கவும இந்தக் கருத்துக்களை அந்த கட்சியினர் உடனடியாக நிறு த்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வடக்கு -கிழக்கில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டே நாடாளுமன்றம் சென்றுள்ளனர். அந்த வகையில் அவர்களை வெளியேறக் கூறுவதற்கு சோமவன்ச அமரசிங்கவுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்று தெரிவித்தார்

இதேவேளை, இலங்கையில் அவசரகால நிலையை உடனடியாக அமுல்படுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள விடுப்பது நியாயமற்றதென தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளன.

# தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நாளை துர்க்காபுரம் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

முதலல் சிக்கனச் சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் காலை 9.00 மணிக்கு க.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.கணக்காய்வுக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ். பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.ஜயாத்துரை கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் சி.சிவமகாராசா ஆகியோரும் யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.கலைச்செல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஊழியர் தொழிற்சங்க தெல்லிப்பளை கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் காலை 10.00 மணிக்கு ச.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக, யாழ்.மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் சி.விஜிதரன் ஆகியோரும் சிறப்பு விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியற்துறை தொழிற்சங்க பொறுப்பாளர் இ.இமையவன் யாழ.மாவட்ட அரசியற துறையைச் சேர்ந்த பவநீதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராகவும், தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் சி.சிவமகாராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து பணியாளர் நலன்புரிச்சங்க வருடாந்த பொதுக் கூட்டம காலை 11.00 மணிக்கு து.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி-வடக்குப் பிரதேச செயலர் க.குணராசா, சிறப்பு விருந்தினராக முன்னாள் பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை முன்னாள் செயலாளருமான சு.கணேசமூர்த்தி கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் சி.சிவமகாராசாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

## தேசிய பாடசாலைகளில்

# கல்வித்தரத்தை மேம்படுத்த கல்வி அமைச்சு தீர்மானம்

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு திட்டமொன்றை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள 324 தேசிய பாடசாலைகளில்- 50 பாடசாலைகளில் மாத்திரம் பெற்றோர்கள் பிள்ளைகளை அனுமதிப்பதில் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றனர். மற்றைய பாடசாலைகளில் ஆளணி பற்றாக்குறை நிலவி வருவதாகக் கூறப்படுகின்றது. ஆகவே, இவற்றை எவ்வாறு சிறப்பாக மாற்றுவது என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகம் நேற்று கே.கே.எஸ் வீதியில் திறந்துவைப்பு

(யாழ்பாணம்)

யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகம் நேற்று கே.கே.ஸ். வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின், யாழ்.அலுவலகத்தின் முன் நிறுவப்பட்டுள்ள இந்த பெயர்ப் பலகையை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட பிரதிநிதி த.பஞ்சலிங்கம் திறந்து வைத்தார். முன்னதாக பொதுச் சுடரினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன், ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து யாழ்.பொதுமக்களின் ஒன்றிய அலுவலகத்தினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஒன்றியத்தின் தலைவர் பி.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொதுகூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.க.ஈழவேந்தன், சிவநேசன், மக்கள் பணிமனைத் தலைவர் அபியாலன், வைத்தியர் அருளானந்தம், உட்பட பொது அமைப்புக்களைச் சேர்ந்த பலரும் இதில் கருத்துரைகளை வழங்கியுள்ளார்கள். (ப)

சர்வதேச புலனாய்வு அரசியல் -வன்கூவரிலிருந்து ரிஷி

# மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

இந்த இடத்தில் ஆயுத விடயங்களில் ரஷ்யர்கள் எல்லோரையும் குழப்பியடிப்பதில் கில்லாடிகள். ஒரே வகை உபகரணத்துக்குச் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்து, புதுப்புது model எண்கள் கொடுத்து விடுவார்கள். மற்றையவர்கள் இது எது, அது எது என்று தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டியிருக்கும். இங்கு நாங்கள் குறிப்பிடும் S.S.N 23 ரக ஏவுகணைக்கும் இதே குழப்பம் உண்டு. இதன் ஓரிரு மாற்றங்கள் செய்யப்பட்ட பதிப்புக்களுக்கு வேறு வேறு பெயர்களும் உண்டு. வேறு வேறு model எண்களும் உண்டு. உதாரணமாக SSN54, 29 RMU இதில் எந்தப் பெயர் சொல்லப்பட்டாலும் அடிப்படையான Model SSN23 தான்.

SLBM குறித்த நேரத்தில் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படவில்லை என்றவுடன், அதற்கான வேறு வேறு காரணங்கள் ஊகிக்கப்பட்டன. முதல் வந்த தகவல்களின்படி வெளியே வந்த ஊகங்கள் முதலாவது -

ஏவுகணை ஏவுதலுக்காகக் கொடுக்கப்பட்ட Eject Control Command ஏவுகணையை Launcher இலிருந்து ஏவவில்லை, மாறாக ஒரு வெடிவிபத்தை ஏற்படுத்தியது என்பது தொடர்ந்து வந்த ஊகங்கள். Command கொடுக்கப்பட்டவுடன், ஏவுகணை Launcher இலிருந்து வெடிப்பதற்கு முன்னர், Eject பண்ணப்பட்டு கடலில் வீழ்ந்துவிட்டது. மூன்றாவது ஊகம், இவர்களது ஏவுகணை Launch இன் அமெரிக்க சட்டிலைட் ஒன்றிலிருந்து Singnal மூலம் Jam பண்ணப்பட்டு ஏவப்படமுடியாமல் தடுக்கப்பட்டு விட்டது. இந்த ஊகங்களில் எது சரியானது அல்லது ஏதாவது சரியானதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ரஷ்ய இராணுவ உயர்மட்டத்திலிருந்து யாராவது வாய்திறந்தால்தான் தெரிந்து கொள்ளமுடியும்.

ஆனால், ஏவுகணை கிளம்பவில்லை என்ற விடயம் வெளியே பரவியவுடன், ரஷ்ய இராணுவ உயர் மட்டத்திலிருந்து ஒருவர் வாய்திறக்கத்தான் செய்தார். ஆனால, அதை எவரும் நம்பவோ Serious ஆக எடுக்கவோ தயாராகவில்லை. ரஷ்யத் தரப்பிலிருந்து கருத்துக் கூறியவர் ரஷ்ய கடற்படையின் தலைவர் விளாடி மக்ரடோவ். அவரது கூற்றுப்படி ரஷ்யா ஏவிப் பரிசோதித்துப் பார்க்கவிருந்தது நிஜமான ஏவுகணை இல்லையாம். அதனால்தான் அது இயக்கப்பட்டவுடன் வானில் பறக்கவில்லையாம். இந்தக்கூற்றை அவரது கடற்படையில் உள்ள எந்த வொரு கொமாண்டர்கூட நம்பியிருப்பாரா என்பது சந்தேகமே. அந்த அளவிற்கு முன்னேற்பாடுகள், எச்சரிக்கைகள், பாதுகாப்புகள் and top of that ஏவுகணை பரிசோதனையை நேரில் பார்க்க வந்து, மற்றுமோர் கப்பலில் காத்திருந்த ரஷ்ய ஜனாதிபதி இவ்வளவும் Just for a simulation? சுவாரஷ்யமான ரஷ்ய கற்பனை.

ஊகங்கள் ஒரு புறமாக இருக்க, சம்பவம் நடந்து இரு நாட்களின் பின்னர், அமெரிக்க சட்டிலைட்டின் Monitoring device ஒன்று கொடுத்த Vibration data வை வைத்து ஓரளவுக்கு ஊகிக்கப்பட்டதுதான் உண்மையாக இருக்கலாம். அதன்படி அந்தப் பிராந்தியத்தில் உள்ள அதிர்வலைகளை Submarine நின்றிருந்த இடத்தின் 0.64 Km சுற்று வட்டாரத்தில் சட்டிலைட் Monitor பண்ணியதில் இருந்து கிடைதத தரவு.

அந்தப் பிராந்தியத்திலிருந்த ஏவுகணை ஒன்று இயக்கப்பட்டு Power கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏவுகணையின் இயங்கும் பகுதியும் Launcher இன் தள்ளும் பகுதியும் அதாவது Eject Unit உம் சுமார் மூன்று விநாடிகள் வித்தியாசத்தில் இயங்கத் தொடங்கினால்தான் ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்படும். அந்த இறுதிக் கட்டத்துக்கு ஏவுகணை தயாராவதற்கும் முதலாவது Power கொடுக்கப்படுவதற்கும் இடையே சுமார் நான்கிலிருந்து ஐந்தரை நிமிடங்கள் எடுக்கும். இதை Sequence System Check என்று சொல்லுவார்கள். முதலாவது Power கொடுக்கப்பட்டவுடன் automatica காக Computer செய்யும் ஒருவிதமான Cross Checks இவை. இந்த Sequecing எல்லாம் திருப்திகரமாக இருந்தால் தான் launcher Ejection power கிடைக்கும் அந்த விநாடியில் இருந்து சரியாக மூன்றாவது விநாடியில் சட்ரலைட் இயங்குவதற்கு Force Power கிடைக்கும். ஏவுகணை ஏவப்படும் சட்டலைட் monitoing device தரவின் படி பார்த்தால் initial power கொடுக்கப்பட்டு, அடுத்துவரும் sequence system check inital பண்ணப்பட்டிருக்கிறது. சுமார் நான்கிலிருந்து ஐந்தரை நிமிடங்கள் வரை நீடிக்க வேண்டிய Sequence checks ஆரம்பிதது 3.18 நிமிடங்களிலேயே நின்று போனது. அதனால் தான் ஏவப்படுவதற்கான இறுதிக் கட்டம் வரை செயற்பாடு போகவில்லை.



sequence check முழுமையாக முடிவடையாமல் பாதியிலேயே abort பண்ணப்பட்டால் ஏவுகணையின் electric system உடனடியாக short பண்ணப்பட்டு ஏவலுக்கான power போவதை Block பண்ணிவிடும். அதுதான் ரஷ்ய ஏவுகணைக்கும் நடந்தது.

ரஷ்ய ஏவுகணை என்ன எல்லாம் ஏவுகணைகளிலும் இப்படியான operational system block அமைப்பு ஒன்று இருக்கும். ரஷ்யன் ஏவுகணையிலும் அது நிச்சயமாக இருந்திருக்கும். ஆனால், sequence checks ஆரம்பித்து 3.18 நிமிடத்தில் நின்று போனதன் காரணம் system failur வரா? அதை இயக்கியவர்கள் கடைசி நேரத்தில் ஏதோ பிழை கண்டுபிடித்து manual ஆன பாதியில் நிறுத்தி விட்டார்களா என்பது தெரியாது.

ஏன் ஒரு long shot இல் யோசித்தால், அமெரிக்க சட்டிலைட் ஒன்று இவர்களது electric circuit jam பண்ணியதா என்று கூட தொழியாது நிஜமான காரணம் அனேகமாக கடைசி வரை வெளியே தெரியவரவும் வராது.

ரஷ்யன் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து S.L.B.M ஏவப்படவேண்டிய நேரத்திற்கு ஏவப்படவில்லை என்றவுடன் இரண்டு நீர் மூழ்க்கிக் கப்பலுக்கிடையேயும், குழப்பமான உரையாடல்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு கட்டத்தில் ரஷ்ய அதிபர் இருந்த கப்பலிலிருந்து மற்றைய கப்பலுக்கு எப்படியாவது அடுத்து வரும் முப்பது நிமிடங்களுக்குள் ஏவுகணை ஒன்று ஏவப்பட்டே ஆக வேண்டும். அது எந்த வகை ஏவுகணையாக இருந்தாலும் பரவாயில்லை என்ற ரீதியில் உத்தரவு ஒன்று ரஷ்ய அதிபரின் ஒப்புதலோடு Radio transmission மூலமாக தெரிவிக்கப்பட்டதாக சொல்லுகிறார்கள்.

இதை அடுத்து வந்த ஊர்ஜிதமாகாத தகவல் ஒன்று நொமோஸகோக் கப்பலின் கப்டன் தனது கப்பலில் stand by ஆக இருந்த இரண்டாவது S.L.B.M ஒன்றை Launch பண்ண முயன்றதாகவும், ஆனால் புதிய S.L.B.M அவசரகதியில் Format பண்ணப்பட்டதால் launcher க்கும் missile க்கும் இடையே உள்ள common unit இல் system சரியாக நடைபெறாமல் இவர்கள் முயற்சித்த இரண்டாவது ஏவல் முயற்சியும் தோல்வியில் முடிந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த இரண்டாவது முயற்சி தான் ரஷ்ய தரப்பு எதுவித தகவலையும் வெளியிடவில்லை. குறைந்தபட்சம் முதலாவது ஏவுகணை நிகழ்ச்சிக்கு அது வெறும் Simil ator பயிற்சிதான் என்று கூறியது போல கூட, இரண்டாவது முயற்சி பற்றிக் கூறவில்லை. அதற்குமேல் ஒருபடி போய் இந்த இரண்டாவது ஏவல் முயற்சியை மறுநாள் வெளியிட்ட செய்திக்குறிப்பு ஒன்றில் மறுத்திருக்கிறார்கள். இருந்த போதிலும் சர்வதேச Media Reports இல் கூறப்பட்டிருந்ததன்படி இரண்டாவது முயற்சியும் தோல்வியில் முடிந்ததை உறுதிப்படுத்தியிருக்கின்றன. Media Reports இல் கூறப்பட்டிருந்ததன்படி இரண்டாவது SLBM அதனது, Tube இருந்து வெளியேறவே முடியாமல் உள்ளேயே சிக்கிக்கொண்டதாகத் தெரிகிறது. முக்கிய நகழ்வு ஒன்றில், முக்கியஸ்தர்கள் முன்னிலையில் SLBM ஏவப்படுவதற்கு இவர்கள் தேர்ந்தெடுத்திருந்த நீர்மூழ்கிக் கப்பல் தவறானதா? அதாவது, அந்தக் கப்பலிலிருந்து SLBM ஏவப்படுவது சாத்தியமானதா? எனற ரீதியில் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று மறுநாள் சந்தேகத்தைக் கிளப்பியிருந்தது. சம்பந்தப்பட்ட கப்பலின் கடந்த கால செயல்முறைகளைக் கவனிதது்ப் பார்த்தால், பிரிட்டிஷ் பத்திரிகை எழுப்பிய சந்தேகம் ஆதாரமற்றது என்றுதான் சொல்ல வேண்டும். இதே நீர்மூழ்கிக் கப்பல் முதன்முறையாக ரஷ்யக் கடற்பரப்பில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஆண்டான 1991 இல் கிட்டததட்ட இப்போது நடைபெற்றது.

*(தொடரும்...)*

வரலாற்று நிகழ்விலிருந்து... சபேசன்



# தமிழர் இதயத்தை விட்டுவிலகாத கறுப்பு ஜூலை நினைவுகள்!

மிகக்கொடூரம் வாய்ந்ததும், சோகம் நிறைந்ததுமான கறுப்பு யூலை இனக்கலவரங்கள் நடந்து 21 ஆண்டுகள் ஆகின்ற இந்த வேளையிலும், அந்தத் தமிழினப் படுகொலைகளின் வேதனைகளும், வடுக்களும் எந்த ஒரு தமிழனின் இதயத்தை விட்டு விலகாமல் இருக்கும்.

1983 ஆம் ஆண்டு யூலை மாதம், இலங்கைத் தீவில் நடைபெற்ற இனக்கலவரம் என்கினற படுகொலைகள், இலங்கை அரசின் அநாகரிக கலாசாரத்தின் கேவலமான கீழ் நிலையை உலகத்துக்கு எடுத்துக் காட்டின. இந்தத் தமிழ் படுகொலைகள், திடீரென ஆவேசத்தல் நடாத்தப்பட்டதல்ல, ஒரு பௌத்த சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிடப்பட்டு, முறையாகச் செயற்படுத்தப்பட்ட இனப்படுகொலைகள் தான் யூலை 83 தமிழினப் படுகொலைகள்.

அந்த வாரம் ஆயிரக் கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் ஈவு இரக்கமின்றி வெட்டிக்கொல்லப் பட்டனர், தீயிட்டுக்கொழுத்தப் பட்டனர். கோடிக்கணக்கில் தமிழர்களின் சொத்துக்கள் கொள்ளையிடப் பட்டன. அது மட்டுமல்ல சிறைச் சாலைக்குள்ளும், கோரக்கொலைகள் நடாத்தப்பட்டன. தங்கத்துரை, குட்டிமணி உடபட 53 தமிழ் இளைஞர்களை குண்டர்கள் குத்திக் குதறிக் கொன்றார்கள். ஒரு பயங்கரவாத அரசாங்கத்தின் சகல சக்திகளும் ஒருமுகப்பட்டு, தமிழ் இனத்தின் மீது கோரத்தாண்டவம் ஆடின.

1983 ஆம் ஆண்டு யூலை மாத இனக்கலவரங்கள், தமிழ் மக்களுக்குப் புதிதான ஒன்றல்ல. 1956, 1958, 1974, 1977, ஆண்டுகள் என்று அதற்கு முன்னரும் மாறி மாறி வந்த சிங்கள அரசு களால் பல தடவைகள் கட்டவிழ்த்துவிடப் பட்ட தமிழினப் படுகொலைகளின் உச்சக் கட்ட வெளிப்பாடுதான் 83 கறுப்பு யூலை.

நாசத்தையும், அழிவையும் தமிழீழ மக்களுக்குத் தந்த இந்த யூலை 83 இனப்படுகொலைகள் இன்னொரு விதத்தில் சிலருக்கு நன்மைகளையும் தந்தது என்பதும் உண்மைதான்! ஆம், இலங்கைத் தீவில் தமிழருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணததால் புலம் பெயர்ந்த எம்போன்றோரு ் ந அமைதியான வாழ்க்கையை அமைத்திடுவதற்கு வெளிநாடுகள் அனுதாபத்துடன் அனுமதி அளித்ததுக்கும் இரத்தம் தோய்ந்த யூலை 83 காரணமாக அமைந்தது. 21 ஆண்டுகளுக்கு முன்பு நாகரீக உலகில் அதிர்ச்சி கொள்ளககூடிய வகையில் நடைபெற்ற இனப்படுகொலைகள், பின்னர் ஓய்தனவா என்று கேட்டால், அதற்குரிய பதில் கசப்பானதாகத்தான் இருக்கும்.

ஆமாம்! யூலை 83 ஒரு தூசுக்குச் சமன் என்கின்ற விதத்தில் பின்னரும் தமிழர்கள் நாளாந்தம் படுகொலை செய்யப்பட்டதும், கைது செய்யப்பட்டது, கைது செய்தும் காணாமல் போனது, தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட் பட்டதும், செம்மணி போன்ற மனிதப் புதைகுழிகளில் போய் தெரியாமல் உறங்கிப்போனதும் தொடர்ந்தும் நடைபெற்றன.

யூலை 83 இலங்கையின் பல இடங்களில் இருந்தும் தமிழர்கள் அடித்து விரட்டப்பட்ட போது, தன் தனயர்களைக் கைநீட்டி வரவேற்று கட்டித் தழுவியது யாழ். குடாநாடு. ஆனால், அதே யாழ்.குடாநாடு இரவோடு இரவாக ஒரே நாளில் தனது மைந்தர்கள் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள், அரச பயங்கரவாதம் காரணமாக, அகதிகளாக அல்லற்பட்டு இடம் பெயர்ந்ததையும், பின்னாளில் கண்டு கதறியது. வாழையடி வாழையாக வாழ்ந்தவர்கள், வந்தவரையும் வாழ வைத்தவர்கள், சொந்த நாட்டிலேயே சுகம் இழந்து, சுற்றம் இழந்து சோகத்தில் மர நிழலில் - வீதியோரத்தில் - காடுகளில் வாழ வேணடிய காலமும் வந்தது. இலங்கை அரச பயங்கர வாதத்தால், ஆக்கிரமிககப்பட்ட பிரதேசங்களில் தினமும செத்துப் பிழைத்த அந்த ஜீவன்களுக்கு, யூலை 83 ஒரு தூசு அல்லவா?

யூலை 83 மீண்டும் தொடர்ந்தது - வித் தியாசமான விதத்தில் - வேற்று வடிவங்களில் தினம் தினம் ஈழத தமிழர்களை அழிப்பதற்கு யூலை 83 தொடர்ந்தும் செயற்பட்டது. ஆனால், அதற்கு வேறு பெயர்கள் இடப்பட் டன. இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள், அவற்றின் உண்மையான பெயர் யூலை 83 உணவுத தடை - அதன் மறுபெயர் யூலை 83! மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தடை - அதன் சரியான பெயர் யூலை 83, மனித உரிமைகள் மீறல்கள் - அதன் ஆரம்பப்பெயர் யூலை 83 காணாமற்போனோரின் கதை - அதன் உட்பெயர் யூலை 83, கிருஷாந்தி போன்றோரின் கண்ணீர் கதறல்கள் - அதே கறுபபு யூலை 83!

83 யூலை மாதம மட்டும்தான் ஞாபகம் இருக்கின்றதா? 83 இல் இருந்து ஒவ்வொரு நாளும் ஈழத்தில் நடந்த அக்கிரமங்கள், அட்டூழியங்கள், அநியாயங்கள் யாவும் மறந்து போகுமா என்ன?

யூலை 83... என்று நினைத்துக் கலங்கிவிட்டுச் சும்மா இருக்கும் நேரமல்ல இது. உரிமை இழநது பின்னர் உடமை இழந்து இப்போது உயிர்கொடுத்துப் போரா டுகின்ற எமது இனத்தின் உணர்வு களுக்கு நாம் தோள்கொடுக்க வேண்டிய நேரம் இது. சொல்லொண் ணாக் கஷ்டங்களை அனுபவித்த எமது மக்கள் இன்று தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத்தின் ஏக தலைமையில் நம்பிக்கையோடு தலை நிமிர்ந்து - பொங்கு தமிழாகப் பூரித்து எழுந்து நிற்கும் வேளை இப்போது!

தமது அடிப்படை வேட்கைகளாக தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை வெளிப்படுத்தி அவற்றை அரசியல் ரீதியாக சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஊடாகப் பெற்றிடலாம் என்ற நம்பிக்கையில் எமது இனம் காத்து நிற்கின்றது. அவர்களது அடிப்படை வேட்கைகள் நிறைவேறுவதற்கு புலம் பெயர்ந்த நாம் - தொடர்ந்து குரல் கொடுப்போம் அவர்களது இலட்சியத்தை அடைவதற்கு தோள் கொடுப்போம், மறவர்கைகளைப் பலப்படுத்துவோம். நாளைபபொழுது தமிழர் வாழ்வில் நல்லபடியாக மலரும் என்ற நம்பிக்கை வரவேண்டும் என்றால், அதற்கு நாமும் நமது கடமையைச் செயயவேண்டும் அல்லவா?

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம

# பாக்தாத்தில் கார்க்குண்டுத் தாக்குதல்

# 10 பொதுமக்கள் பலி, 40 பேர் காயம்!



(பாக்தாத்)

பாக்தாத்தின் மத்திய பகுதியில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் பத்து பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 40 பேர்வரை படுகாயமடைந்தனர்.

கடமை முடிந்து தொழிலாளர்கள் படையினரின் சோதனைக்காக நீண்ட வரிசையில் நின்ற வேளையிலேயே - இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஈராக்கின் இடைக்கால பிரதமர் இயட் அலாவி சென்றார். அங்கு அவர் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் விரைவில் தோற்கடிக்கப்படுவார்களெனத் தெரிவித்தார்.

ஈராக் மக்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலே இதுவாகும். தாக்குதலை நடத்தியவர்கள் விரைவில் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் நால்வரின் உடல்களின் மிகுதிப்பாகங்கள் அடையாளம் காணப்படாமல் புதைக்கப்பட்டதாக பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

இது ஒரு தற்கொலைத் தாக்குதலென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.- காருக்குள் 450 கிலோகிராம் வெடிகுண்டு இருந்ததாக ஈராக் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில், தான் மைதானமொன்றுக்குள் தூக்கி வீசப்பட்டதாகவும், பின்னர் எழுந்து பார்த்த வேளை, பலர் உயிரிழந்து கிடந்ததாக அலாவி ஹசன் தெரிவித்தார்.

இந்தக் குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்ற பிரதேசத்தை அமெரிக்கப் படையினர் சுற்றிவளைத்து தேடுதலை நடத்திவருகின்றனர். இவர்களுக்கு அமெரிக்க ஹெலிகள் பாதுகாப்பு வழங்கி வருகின்றன.



# இரட்டைக் குழந்தைகள் சங்கமம்



இங்கிலாந்தின் லண்டன் நகரில் இரட்டைக் குழந்தைகள் மற்றும் ஒரே பிரசவத்தில் பிறந்த 3 குழந்தைகளின் மாநாடு நடைபெற்றது.

இரட்டை மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளை ஒரே பிரசவசத்தில் பெற்ற தாய்மார்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இரட்டைக் குழந்தைகளை வளர்ப்பதில் பொருளாதார ரீதியிலும், உடல் ரீதியிலும் ஏற்படும் சிக்கல்களை மனம் விட்டுப் பேசி அவர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

அந்தக் குழந்தைகளுககாக சிறப்பு விளையாட்டு நிகழ்ச்சிகளும். நடத்தப்பட்டன. இதேபோல ஒரு மாநாடு அமெரிக்காவின் செயின்ட் லுயி நகரிலும் நடைபெற்றது.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுடன் காட்சி கொடுக்கும் இந்த சிறுவர்களும் 4 வயது இரட்டையர்கள்தான்.

ஆனாலும் இவர்கள் இரட்டையர்கள் மாநாட்டுக்கு வந்தவர்கள் அல்ல. பென்சில்வேனியாவில் அதிபர் புஷ் தேர்தல் பிரசாரத்திற்கு வந்தபோது, ஒஸ்டின் பாலஸ், அந்தோனி பாலஸ் என்ற இந்த இரட்டைக் குழந்தைகளைத் தூக்கிவைத்துக் கொஞ்சினார்.

## உலக நோக்கு

# ஈராக்கில் கடத்தப்பட்ட

# பல்கேரிய வாகனச் சாரதி சிரச்சேதம் செய்யப்பட்டார்!

இஸ்லாமிய போராளிக் குழுக்களால் ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட வாகனச்சாரதி சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளதாக பல்கேரிய அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடத்தப்பட்ட பல்கேரிய நாட்டின் வாகனச்சாரதியான இரண்டாமவரும், நேற்று மாலைக்கிடையில் சிரச்சேதம் செய்யப்படவுள்ளதாக அல் ஜசீரா தெரிவித்தது.

ஈராக்கின் தென்பகுதியில் பல்கேரிய நாட்டின் 500 துருப்பினர் உள்ளதாகவும், இவர்கள் ஈராக்கிலிருந்து வெளியேறமாட்டார்களெனவும் பல்கேரிய அரசு தெரிவித்தது.

அல் ஜசீராவில் காட்டப்பட்ட வீடியோ நாடாவில் கொல்லப்பட்ட பல்கேரிய பிரஜை ஒரேஞ் கலர் ஆடை அணிந்திருந்ததுடன், மூன்று முகமூடி அணிந்தவர்களுக்கு முன்னால் முழங்காலில் நிறுத்தப்பட்டிருந்தார்.

இவர் கொல்லப்பட்ட செய்தியை அறிந்தவுடன் பல்கேரிய நாடே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

பல்கேரியா தொடர்ந்தும் ஈராக்கிற்கான மீள்கட்டுமானம், ஸ்திரத்தன்மை மற்றும் ஜனநாயக மேம்பாடு தொடர்பாக உதவி செய்யுமென அந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற சபாநாயகர் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, கடத்தப்பட்ட எகிப்திய நாட்டவரையும் கொல்லப்போவதாக இஸ்லாமிய போராளிகள் எச்சரித்துள்ளனர்.

எகிப்திய நாட்டவர் தொழில்புரியும் சவுதி கம்பனி ஈராக்கிலுள்ளதாகவும், அது 72 மணி நேரத்தில் வெளியேறவேண்டுமெனவும் - இல்லையெனில் அவர் கொல்லப்படுவாரெனவும் இஸ்லாமிய போராளிகள் தெரிவித்தனர்.

# ஈராக்கிற்கு படை அனுப்பக்கூடாது; தென்கொரிய மக்கள் ஆர்ப்பாட்டம்!

(சியோல்)

ஈராக்கில் தென்கொரியாவைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு தலை துண்டித்துக் கொலைசெய்யப்பட்டார்.

ஆனாலும் தென்கொரிய அரசு தனது நிலையிலிருந்து மாறவில்லை. ஈராக்கிற்கு 3 ஆயிரம் இராணுவத்தினரை அனுப்பிவைக்கிறது.

இந்தத் திட்டத்தைக் கைவிடக் கோரி, தென்கொரியாவின் சியோல் நகரில் இலட்சக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினார்கள்.

துப்பாக்கி வடிவில் அட்டைகளை ஏந்தியபடி, அவர்கள் ஈராக்கிலிருந்து இராணுவத்தினரை வாபஸ் பெறவேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினார்கள்.



# நிர்வாண சோதனை தொடர்பான பெர்னாண்டஸின் கூற்றுக்கு அமெரிக்கத் தூதரகம் மறுப்பு!

(புதுடெல்கி)

இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்காவிற்கு இரண்டுமுறை சென்றவேளை அங்குள்ள விமானநிலையத்தில் வைத்து நிர்வாணமாக சோதனையிடப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

இவரின் இந்தக் கூற்றை டெல்கியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது. சில இராஜதந்திர நடைமுறைகள் விமானநிலையத்தில் பின்பற்றப் படவில்லையெனவும், தாம் அதற்காக மன்னிப்புக் கேட்பதாகவும் அந்த தூதரகம் தெரிவித்தது.



அணிவகுப்பு மரியாதையை ஏற்கும் பிரதம நீதியரசர்



அணிவகுப்பைப் பார்வையிடுகிறார் பிரதம நீதியரசர்



வீரசிங்கம் மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் பிரதம விருந்தினர்கள்



நீதிமன்றத்தின் அடிக்கல் நாட்டப்படுகிறது



வீரசிங்கம் மண்டபத்தில் பிரதம விருந்தினர்கள்



நிகழ்வில் கலந்துகொண்டவர்கள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற வன்னிக்கான 'நமது ஈழநாடு' பத்திரிகையின் கிளைப் பணிமனைத் திறப்பு விழாவில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்துவைப்பதைக் காணலாம்.

## நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கும் நீதித்துறைக்கும் தொடர்பில்லை!

### யாழ். வந்த பிரதம நீதியரசர் உரை

நாட்டில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கும், நீதித்துறைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

நீதித்துறை என்பது அரசியலிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என, நேற்று யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா யாழ்.நீதிமன்றக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்ததைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பிரதான நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் உலகில் சட்டத்தையும், நீதியையும் மதிக்கின்ற எந்தவொரு நாட்டிலும் நீதிமன்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்த தலையாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் யாழ்.குடாநாட்டில் ஒரு புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நாட்டிவைத்த இன்றைய தினமானது, இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் மிக முக்கியமானது.

இங்கு மீண்டும் சட்டத்தையும், நீதியையும் உரிய முறையில் நிலை நிறுத்துவதற்காகப் பாரிய நிதி ஒதுக்கீட்டில் நவீனமயப்படுத்தப்பட்ட இக்கட்டடத் தொகுதி அமைக்கப்படவிருக்கிறது.

நீதிமன்றக் கட்டடத் தொகுதியானது கடந்த பத்தாண்டு காலப் போரினால் குடாநாட்டில் அழிக்கப்பட்ட பழைய நீதிமன்றக் கட்டட வளாகத்தில் ஆரம்பிக்கப்படுகிறது.

கடந்த கால கொடிய யுத்தத்தின் பின்னர் தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களது இந்த மண் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் என்பவற்றில் உயர்ந்து நிற்கின்றது. இம்மண் மதிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

கடந்த காலப் போரினால் அழிவினையும், இரத்தக்களரியையும் தன்னகத்தே கொண்ட நிலமாக மாறிவிட்டது. ஆனால், கடந்தகாலப் போரினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு எல்லாம் முடிவுகாணும் ஒரு இறுதிக் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

உங்களது இந்தப் பூமி எத்தனையோ மனிதர்களை இழந்துள்ளது. எத்தனையோ துரோகச் சம்பவங்களை எதிர்கொண்டுள்ளது.

எமது அழகிய தீவாகிய இலங்கை செல்வங்களையும், கலாசார விழுமியங்களையும் உடையது. இத்தனை வளங்களையும் கடந்தகாலப் போர் அழித்துவிட்டது. கடந்த கால கசப்பான அனுபவங்களையும், தழும்புகளையும் மறந்து நாம் எமது தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும்.

நான் யாழ்ப்பாணத்துக்கு பிரதம நீதியரசர் என்ற நிலையில் வரவில்லை. குடாநாட்டு மக்களின் நண்பன் என்ற வகையிலேயே வந்துள்ளேன். 1969 ஆம் ஆண்டில் நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய போது யாழ்.குடாநாடு அழகிய உயர்ந்த கட்டடங்களையும், மரங்களையும் கொண்ட ஒரு பிரதேசமாகக் காணப்பட்டது.

அப்போது இக்கட்டடத்திற்கு முன்னே இருந்த வாடிவீட்டில் நான் தங்கியிருந்தேன். அதை இப்போது நினைத்துப்பார்க்க மனதுக்கு மிகவும் வேதனையாக உள்ளது.

இதை மாற்றி மீண்டும் பழைய யாழ்ப்பாணத்தை உருவாக்க நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பல வருடங்களாக நான் வடக்கு -கிழக்கு நீதித்துறை தொடர்பாக அக்கறையுடையவனாகவே இருக்கிறேன்.

இத்தகைய திட்டங்களை அர்ப்பணிப்பு, அவதானிப்பு மற்றும் நுட்பங்களுடன் அணுகினால் மட்டுமே வெற்றியுடன் பூரணப்படுத்தமுடியும்.

பெரும்பாலும் இந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதி 18 மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கும், நீதித்துறைக்கும் எவ்வகையிலும் தொடர்புமில்லை.

நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நீதித்துறை என்பது அரசியலிலிருந்து முற்றிலும் வேறுபட்டது எனவும் தெரிவித்தார்.

## புலிகளை பலவீனப்படுத்த படைத்தரப்பு நடவடிக்கை

### தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிலிருந்து நீக்கப்பட்ட கருணாவைப் பயன்படுத்தி, புலிகளைப் பலவீனப்படுத்தும் படைத்தரப்பின் நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபித்துள்ளது.

அவுஸ்ரேலிய உதவி உயர்ஸ்தானிகர் விடுத்த அழைப்பின் பேரில் நேற்று அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்திலும் அதைப்போல யுத்த நிறுத்த உடன்பாட்டிலும் சட்டரீதியில் இருக்கிறார்கள். தற்போது அவர்கள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், வடக்கு - கிழக்கில் இயல்பு வாழ்க்கைக்காக இடைக்காலக் கட்டமைப்பைக் கோருகின்றனர் எனவும் அவுஸ்ரேலிய உதவி உயர்ஸ்தானிகரிடம் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.நீதிமன்ற...

லூரி பான்ட் இசைக் குழுவினர் நீதி மன்ற வளாகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நீதிமன்ற வளாக வாசலில் வைத்து யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதியரசர் கே.பி.எல்.வரதராஜா மலர் மாலையை அணிவித்துக் கௌரவித்தார்.

காலை 10.45 மணிக்கு புதிய நீதிமன்றக் கட்டடத்துக்கான அடிக்கல்லை பிரதம நீதியரசர் நாட்டிவைத்ததுடன் பெயர்க்கல்லையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்விற்கு நீதியரசர்கள், சட்டத்தரணிகள், அரச அதிகாரிகள மதகுருமார், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு பிரதம நீதியரசர் அடங்கிய குழுவினர், வேம்படி மகளிர் கல்லூரி பான்ட் இசை மற்றும் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர்.

வீரசிங்கம் மண்டபத்தில் பிரதான நிகழ்வுகள் யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதியரசர் கே.பி.எல் வரதராஜா தலைமையில் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எல்.வரதராஜா, யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, சட்ட நீதி, புனரமைப்பு திட்ட இயக்குநர் சுமித்ரா குணவர்த்தன, பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா உட்படப் பலர் உரையாற்றினர். நிகழ்வின் இறுதியில் சாந்தா அபின்ன சிங்க நன்றியுரை ஆற்றினார்.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, பிரதம நீதியரசர் யாழ்.மாவட்ட நீதிமன்றத்துக்குச் சென்று அங்கு பணியாற்றும் ஊழியர்களைச் சந்தித்துவிட்டு பலாலி விமானப்படைத் தளத்திற்குச் சென்று உலங்கு வானூர்தி மூலம் நயினாதீவில் அமைந்துள்ள நாகவிகாரைக்குச் சென்றார்.

பின்னர் மீண்டும் உலங்கு வானூர்தி மூலம் பலாலி விமானப் படைத் தளத்திற்குத் திரும்பிய பிரதம நீதியரசர் - மல்லாகம் நீதிமன்றக் கட்டடத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டார். (தீ,லெ)

## புலிகளை யுத்தத்தில்...

கிழக்கு மாகாணத்தில் பேச்சு வார்த்தைகளில் தற்காலிகமாக விடுதலைப் புலிகள் கலந்துகொள்வது இல்லை என அறிவித்துள்ளனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் பேச்சு வார்த்தைகளில் இவர்கள் கலந்து கொள்கின்றனர்.

எதிர்காலத்தில் இவர்கள் பேச்சு வார்த்தைகளுக்கு முன் வருவார்கள் எனநான் எண்ணுகின்றேன். பேச்சு வார்த்தையில் ஈடுபடாமல் இரண்டு தரபினரும் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வது சிரமமான விடயமாகும்.

ஆயுதம் ஏந்தியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சமாதான வழியில் திருப்பும் வகையில் படைத்தரப்பு பொறுமையுடன் செயற்பட்டு வருகிறது.

ஹிங்குராங்கொட விகாரையில் தங்கவைக்கப்பட்டிருந்த பின்னர், நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட 14 ஆயுதம் தாங்கிய இளைஞர்களும் இராணுவ பாதுகாப்புடனேயே மட்டக்களப்புக்கு அழைத்துச்செல்லப்பட்டதாக வெளியான தகவல்கள் தவறானவை என்றும் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் தமிழீழ டுதலைப் புலிகளுக்கு வந்ததாகக் கூறப்படும் நவீன தொலைத்தொடர்பு கருவிகள் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இதேவேளை, இதனைக் கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறு தாம் சுங்கத் துறையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகக் கடற்படைத் தளபதி அங்கு குறிப்பிட்டார்.

இது, நவீன தொலைத்தொடர்புக் கருவிகள் என்பதால் அதனைக் கடற்படையினர் பரீட்சிப்பதே சிறந்தது. முல்லைத்தீவு கடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதும், அந்தப் பிரதேசத்தில் கடற்படையினர் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## விடுதலைப் புலிகள்...

படை நிபுணர்களே அரசுக்கு வழங்கி வருகின்றனர்.

அமெரிக்க அரசாங்கத்தின் அங்காரத்துடனேயே இந்த துறைமுகத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த இரகசியத் திட்டத்தின் விளைவாகவே, மட்டக்களப்பில் இருந்து தப்பியோடி கருணா சில காலம் தலைமறைவாகியிருந்த பின்னர் மீண்டும் தலையெடுத்திருக்கிறார்.

அமெரிக்க இலங்கை அரசுகளின் இந்த இரகசியக் கூட்டுத்திட்டத்தின் முதல் கட்டமாகவே, கருணாவுக்கு வானொலிப் பிரச்சார வசதிகள் செய்து கொடுத்து மக்கள் மத்தியில் குழப்பம் உருவாக்கும்முயற்சி மேற்கொள்ளப்பட்டது எனவும் அந்த அறிக்கையில் மேலும் கூறிப்பிடப்பட்டுள்ளது.

## கருணாவை...

சேர்ந்த தேசவிரோதிகள் யாராவது ஒளிந்திருப்பதற்கான தடயங்கள் ஏதும் இருக்கிறதா என்று தேடுதல் நடத்தி வருவதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்தே கருணாவின் இந்த மிக முக்கியமான சகாக்கள் சதி வேலைகளுக்காக காட்டு வழிகளைப் பயன்படுத்திவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிளில்..

தனர்.

இந்தச் சம்பவத்தில் வாழையம்மன் கோவிலடி திருநெல்வேலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிறிராஜசிங்கம் (வயது-58) என்பவரே மரணமடைந்தவராவார்.

அதேவேளை, ஒட்டோவில் பயணித்தவர்களான பிரான்சிலிருந்து பருத்தித்துறையில் உள்ள தமது உறவினரிடம் வந்தவர்களான ஆர் உதயசுதன் (வயது-36) உ.புஸ்பலதா (வயது-34) உ.சிந்துஜா (வயது-7) உ.செந்தூரன் (வயது-5) எம்.சுபாஜினி (வயது-25) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ப)

## புலிகளுடன்...

முயற்சிகளை மீள் ஆரம்பித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்பாட்டில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சில விட்டுகொடுப்புக்களுடன் ஆதரவு வழங்க ஜே.வி.பி இணக்கம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஆனால், இது எந்த அடிப்படையிலான இணக்கப்பாடு என்பது குறிதது மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கவில்லை.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்
மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்
உடன் விரையுங்கள் இன்றே இணையுங்கள்!
வாடிக்கையாளர் அட்டை மூலம் பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!
❖ இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவு உடன் பெற்றுக்கொள்ளலாம்.
❖ குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு நிறைவுசெய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு
முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.
❖ ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்
❖ இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும்.
❖ இவ் அட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
❖ பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்கள் சேர்க்கப்படமாட்டாது.
❖ இவ் வாடிக்கையாளர் அட்டை 03-07-2004 இல் இருந்து 30-09-2004 வரைக்கும் வழங்கப்படும்.
❖ இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.




குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
(C-2760)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.